தென்றல்

விலை 16 புதிய காசுகள்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, சித்திரை 5 (18-4-'59). சனிக்கிழமை | இதழ் 44

★ காப்பியன் காட்டும் காதல் வழி ! ★

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே நனி நாகரிகம் கண்டவன் தமிழன் என்று அறிஞர் உலகம் கூறுவதுண்டு. இக்கூற்று உயர்வு நவிற்சியாகவே எண்ணி மகிழ்ந்தவர்களில் நானும் ஒருவன். தொடக்கத்தில் பல செய்திகள் பொருந்தாதவை; ஆய்வின்பின் ஏற்கக்கூடிய நிலை அடைதல்உண்டு. நாகரிக முதிர்ச்சியின் நடுப்பகுதியைக் காட்டும் நல்லிலக்கணமாம் தொல்காப்பியம் என் மயக்கத்தை நீக்கிற்று எனலாம்.

உலகில் உயிரினங்களின் வாழ்வில் பொதுவாய் அமையும் இயல்பு காதல் ஆகும். கருத்தொருமித்த இருவர் வாழ்வில் நலம் பெறுதல் இலக்கியங்கள் இயம்பும் உண்மையாகும். நாகரிகம் பெற்றுள்ள இனத்தில் மலரில் மெல்லிய காமத்தைப் பற்றிப் பேசும் பகுதிதான் சிறப்புடைத்து. உணர்ச்சி இழைந்து ஓடும் காமம் தடம் மாறுமானால் வெள்ளமாய், புயலாய் வீசி வாழ்வைச் சிதறடிக்கும். வாழ்க்கை வழவழப்பானதுமல்ல - கரடுமுரடானதுமல்ல என்று ஓர் அறிஞர் கூறியுள்ளார். வாழ்வின் அடிப்படை காதல் - இவ்வுணர்ச்சியின்மேல்தான் ஆயிரம் காலப் பயிர் என்று பாமரரும் அழைக்கும் இல்லறம் தொடங்குகின்றது.

தலைவனும் - தலைவியும் ஒருவரையொருவர் கண்டவுடன் மனம் ஒன்றுபடுவர். அவ்வாறு ஒன்றுபடுதற்கு அவ்விருவர் மாட்டும் ஒத்த பத்து வகைக் குணங்கள் அமைதல் உண்டு. அவ்வாறமையப்பெற்றோரே வாழ்வில் ஒன்றுபடுவர் என்பதைத் தொல்காப்பியம் விளக்கமாய்க் கூறுகிறது. கண்டவுடன் காதல் கொள்ளுதல் பொருந்தாது என்றும், அது நாகரிகம் அன்று என்றும் இன்று கூறப்படுகிறது. ஆனால் தொல்காப்பியர்,

"நாட்டம் இரண்டும்
அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி உரைக்குங்
குறிப்புரை யாகும்"

என்கிறார். ஒத்தமனம் படைத்த இருவரே காதலராய் இயங்குதல் கூடும். அவ்வாறு கண்கள் பேசி, குறிப்பை இருவரும் அறிந்துவிட்டால் இருவர் கண்களும் பேசத் தொடங்கும்; இல்லையெனில் குறிப்புரை நிகழாது என்பார் தொல்காப்பியர்.

"குறிப்பே குறித்தது
கொள்ளு மாயின்
ஆங்கவை நிகழும்
என்மனார் புலவர்."

இவ்வாறு உடன்பட்ட தலைவனும், தலைவியும் கனவில் கண்டு மகிழ்வர்.

இத்தகைய உள்ளம் பண்பட்ட இருவரிடையில் தோழி பற்றாசாக விளங்குகிறாள். தலைவியின் பிரிவின் துயரத்தைப் போக்குவது முதல் தலைவனை மணம் முடிக்க விரைவுபடுத்தும் வரை உற்ற துணையாகத் தோழி அமைவது தமிழர் பண்பாட்டில் உயர்ந்ததொன்றாகும்.

இத்தகைய பிறர் அறியமாட்டாத செய்திகளையும் அறியக்கூடிய தோழியின் இயல்புதான் என்ன? இங்குத்தான் தொல்காப்பியம் சிறந்த கருத்தைக் காட்டுகிறது. தலைவியின் உயிர் தோழியின் உயிர் என்று சொல்லுமாப்போல் அமைத்துள்ள பான்மை உயர்ந்தது.

தோழி எனப்படுபவள் செவிலியின் மகள். செவிலித்தாய் - கைத்தாய் இருவருக்கும் பொதுவாயினும் தாயென்று தலைவியால் வேண்டப்படுபவள் செவிலியேயாகும். ஏன் செவிலியின் மகள் தோழியாய் அமையவேண்டும் என்ற வினாவிற்கு இளம்பூரணர் கூறும் கூற்று விடையாக அமைகின்றது எனலாம். பயின்றவர் எல்லோரும் தோழியர் ஆகார். அரிய செய்திகளை பிறரறியக் கூடாத செய்திகளைக் கூறுதற்கேற்றவள் தோழி. எனவே ஒத்த உணர்ச்சியும் அறிவும் உடையவளாய் இருத்தற்கு உடன் முலையுண்டு வளர்ந்த செவிலி மகளே தோழியாக அமைவாள் என்பதுபோல் கூறுகிறார் இப்பண்புசால் தோழி தலைவிக்கு அறிவூட்டும் துணையாய் அமைதல் வேண்டும் என்பதைத் தொல்காப்பியர்,

"தோழி தானே செவிலி மகளே"
"சூழ்தலும் உசாத்துணை
நிலைமையிற் பொலிமே"

என்பார்.

தலைவி தானாக எதையும் கூற மாட்டாள். ஆனால் தோழி தலைவி மாட்டு யாதுநிகழினும் குறிப்பாலேயே உணர்ந்தறியும் இயல்பு உடையவள் என்கிறார்.

தலைவன் - தலைவியர் உறவைப் பெற்றோர் அறிதல் இல்லை; ஆனால் காலம் வரும்பொழுது தலைவியே தோழியிடம் கூறுவாள். தோழிமூலம் தான் காதலர்உறவு பெற்றோருக்குப் புலப்படுத்தப் பெறும். தலைவியின் காதலை முதலில் குறிப்பால் தோழி உணர்வாள். குறிப்பு உண்மையா என்றறியப் பல செய்திகளைக் கூறி, தலைவியின் வாயாலேயே உண்மையை அறிவாள். பின்னர் இவ்வுறவினைத் தன் தாயிடம் (செவிலி) சமயம் பார்த்துக் கூறுவாள்; செவிலியோ காலமறிந்து நற்றாயிடம் (பெற்ற தாய்) கூறுவாள். நற்றாயும் முருகொத்த சீற்றமுடைய கணவரிடம் (தலைவியின் தந்தை) இடம் பொழுது அறிந்து தலைவி-தலைவன் உறவைக் கூறி, மணம்பேசி முடிப்பர் என்று தொல்காப்பியம் கூறுகின்றது.

தலைவன்-தலைவி உறவைத் தோழி தந்தையிடம் நேரிலேயே கூறக் கூடாதா? என்றால் தலைவியின் இச்செய்கை அறிந்து தந்தை கடுஞ் சினம் கொண்டு மணத்திற்குத் தடையாக அமைவாரே என்று தோழி கூறுதல் இல்லை என்கிறார். எவ்வளவு உளநூல் அறிவு—நாகரிக உணர்வு இவர்கள்மாட்டு அமைந்துள்ளது? எண்ணி எண்ணி வியப்பும் - இன்பமும் அடைவது இயல்பே.

இக்காதலுறவு முற்றிக் கற்பு மணம் கொண்டபின் தலைவன்-தலைவியர் உறவு மிகவும் உயர்ந்த முறையில் காணப்படுகிறது. "தலைவியிடம் தலைவன் உரிமை என்ன? தலைவனிடம் தலைவியின் உரிமை என்ன?" என்பதும் உரிமையும் உறவும் ஒன்றோடொன்று இழைந்து சென்ற இயல்பும் சிந்தித்தற்குரியன. தலைவனிடம் "தலைவி எவ்வாறு பேசினாள்? தலைவன் தலைவியிடம் பணிந்து செல்லவேண்டிய இடம் எது?" என்ற செய்திகளும் அறியக்கூடியன.

எக்காரணம் கொண்டும் தலைவன் முன் தலைவி தற்புகழ்ந்து பேசுதல் இல்லை என்பதை—

"தற்புகழ் கிளவி
கிழவன்முற் கிளத்தல்
எத்திறத் தானும்
கிழத்திக் கில்லை"

—(தொல் பொருள் இளம்-178)

என்று தொல்காப்பியர் மொழிவார். காரணம் தலைவிக்கு அச்சம் நாணம், மடன் எக்காலமும் முன் நிற்பன அதை—

"அச்சமும் நாணும்
மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற்
குரிய என்ப"

— (தொல்-பொருள் 96)

என்று தொல்காப்பியர் கூறுகிறார். ஆனால் அச்சம்-நாணம் காரணமாகத் தலைவி தலைவனிடம் எதுபற்றியும் பேசவேமாட்டாளா? என்றால், 'இல்லை' என்பார். தலைவன் பரத்தை ஒழுக்கம் கொண்ட வேளையில் "அன்பிலை, கொடியை" என்று தோழி கண்டிக்கவும், தலைவி மடன் விட்டு வன் சொல் கூறவும் செய்வராம் இதனையே தொல்காப்பியம் 202 (பொருள்) கூறுகிறது.

தலைவன் பிறருக்குப் பணிபவன் அல்லன்—

"பெருமையும் உரனும் ஆடூஉ மேன" என்பது தொல்காப்பியம், ஆனால் தலைவியிடம் தலைவன் பணிய வேண்டிய இடம் ஒன்றுண்டு என்று தொல்காப்பியர் சுட்டிக் காட்டுகிறார். இதனைத் தொல்காப்பியர்—

"காமக் கடப்பினுட்
பணிந்த கிளவி
காணுங் காலைக்
கிழவோற் குரித்தே
வழிபடு கிழமை
அவட்கிய லான"—

என்று 158-ஆம் சூத்திரத்தில் கூறுகிறார். எனவே புலவிக் காலத்தில் தலைவன் தலைவியைப் பணிந்த மொழியால் பரவவும், பிறவேளைகளில் தலைவி தலைவனை வழிபட்டுப் பணிந்து வாழவும் வேண்டும் என்கிறார்.

தலைவன் பரத்தை ஒழுக்கத்தை மேற்கொண்டு வாழ்பவனாக இருந்தாலும் அதனைக் கூறிக் கண்டிக்கும் பொறுப்பு இருவர் மாட்டே உண்டு. ஒன்று தோழி-மற்றொன்று தலைவி தலைவனுடைய குறைபாடுகளை இருந்தாலும் வெளிப்படையாகக் கூறுதற்குப் பிறருக்கு உரிமை இல்லை என்பதைத் தொல்காப்பியர்—

"மனைவி தலைத்தாட்
கிழவோன் கொடுமை
தம்முள வாதல்
வாயில்கட் கில்லை"

என்று 163-ஆம் சூத்திரத்தில் கூறுகிறார். ஆனால் தலைவன் துன்பப்படும்பொழுது தாய் போலவும், நண்பன் போலவும், காதலி போலவும் அன்புரை கூறக்கூடியவள் தலைவி என்பதை—

'தாய்போற் கழறித்
தழீஇக் கோடல்
ஆய்மனைக் கிழத்திக்கும்
உரித்தென மொழிப
கவ்வொடு மயங்கிய
காலை யான'

என்று 171-ஆம் சூத்திரம் புகல்கின்றது.

தமிழகத் தலைவன் - தலைவியது இயல்புகளும் அவர்கள் வாழ்வியலும் காணும்போது, இருவரும் ஒருவருக்கு ஒருவர் வேண்டியதைக் கொடுத்தும் தேவைப்பட்டதைப் பெற்றும் மனம் ஒன்றி வாழ்ந்தனர் என்பதையே தொல்காப்பியம் உணர்த்துகின்றது.

தொல்காப்பியத்தின் காலம் கி மு 3 அல்லது 4-ம் நூற்றாண்டு என்பார் டாக்டர் நாவலர் பாரதியார் கி. மு. 3-லேயே இத்தகைய உளவியல் முறைகளை—நெறிகளை வரையறைகளைக் கொண்டு தமிழ் மக்கள் வாழ்வியலை நடத்தினர் என்றால் நாகரிகத்தினை நனி முறையில் பேணி வாழ்ந்தனர் என்பதும் உளவியலை ஒட்டி வாழ்ந்தனர் என்பதும் புலனாகும்.

—இராம. இராமநாதன்
பீ. ஏ. (ஆனர்சு)

சீன பக்தியும் அடிமைப் புத்தியும்

இந்தியக் கம்யூனிஸ்ட்கள் மாஸ்கோவின் ஏஜெண்டுகள், பிகிங்கின் எடுபிடிகள், சீனத்துக்கு வேண்டிய உளவாளிகள், ரஷ்யாவுக்காக உயிர் வாழும் ஐந்தாம் படையினர், என்ற விருதுகள பல பெற்றுள்ளார்கள்! உலகத்து அரசியல் நிகழ்ச்சிகளில் எல்லாம் இவர்களுடைய நடவடிக்கைகள், மதிப்பீடுகள், ஆதாரமாக வந்து நின்றுள்ளன. சென்ற திங்களில் இராக் விவகாரங்களில் கெய்ரோவும் மாஸ்கோவும் மோதிக்கொண்ட நேரத்தில் எந்த வகையிலும் பாதிக்கப்படாத இந்தியக் காம்ரேடுகள், ரஷ்யர்களால் செல்லப்பெயருடன் அழைக்கப்பட்ட 'இண்டெஸ்கித் தோழர்கள்' நாசரை எதிர்த்துக் கண்டன மொழிகளை வாரியிறைத்தார்கள்! தங்களுடைய தன்மானத்தைத் தானமாகத்தந்துவிட்டுகுருஷ்சேவின் சேவடிகளில் மலர் சொரிந்து வணங்கினார்கள். வெளிநாடுகளிலேயிருந்து இந்தியக் கம்யூனிஸ்ட்களுக்குக் கட்டளை பிறப்பிக்கும் எஜமானர்கள் இருக்கிறார்கள். அவர்களின் விழி காட்டும் வழியிலே செல்லக் காத்திருக்கும் இவர்கள், இந்தக் குற்றச்சாட்டை இன்றுவரையிலும் ஒப்புக்கொள்ளவில்லை! ஆனால் தங்களின் சொல்லுக்கேற்பச் செயல்படுகிறார்களா என்றால் இன்றுவரையில் இல்லை! கம்யூனிஸ்ட்களைக் கடைசியாகக் காட்டிக்கொடுத்துள்ளன திபேத் நாட்டில் நவசீனா நடத்தியிருக்கும் நாசவேலைகள்! நானிலத்திற்கே வழிகாட்டியெனத் தமிழ்நாட்டு இண்டெஸ்கித் தோழர்களால் நாவலிக்கப் புகழப்பட்ட மாசேதுங்கின் மக்கள் சீனாதான், மலைநாட்டு மக்களை—மதத் தலைவர் லாமாவிடம் இருக்கும் திபேத்திய மக்களை, மரணக்குழி நோக்கி மிக மிக வேகமாகத் துரத்தி விரட்டியுள்ளது! உலகத்து நடுநிலை நாடுகளில் ஒன்றாக இருந்த திபேத், 1951-ம் ஆண்டில் திடீரென்று ஒரு நாள் மக்கள் சீனாவின் ராணுவ நடவடிக்கையினால் சீனாவின் அடிபணிய நேரிட்டது! அமெரிக்க ஆங்கில ஏகாதிபத்தியத்தைக் கண்டிக்கும் கம்யூனிஸ்ட்கள்தான் திபேத் தாக்குண்டதை வரவேற்கத்தக்க செயலாக மதித்தனர்! மக்கள் சீனா என்ற மாடத்திலே உலவுகின்ற மாசேதுங்கும் திபேத் நாட்டை மக்களாட்சிப் பண்புக்கு எதிராக மண்டியிடச் செய்துவிட்டாலும் ஆணைக்கு அடங்கும் தனி நாடாக இயங்க அனுமதித்தார். பண்டித நேருவின் பஞ்சக் கொள்கையான பஞ்சசீலமும் பரிமாறிக்கொள்ளப்பட்டதும் அப்போதுதான். ஆனால் இன்று பங்கப்பட்டு நிற்கிறார்!

நவ சீனாவின் நாச வேலைகள் என்று சொல்வதினாலே 'இந்தியக் கம்யூனிஸ்ட்கள் உள்ளம் துடிக்கிறதே என்று எண்ணினால் நாம் உண்மைக்குத் திரையிடத் தயாராக வேண்டும்! நேரத்திற்கொரு செய்தியைத் தரும் கம்யூனிஸ்ட்களைக் கணக்கிடும் வகையில் திபேத் நாடு தீயோர் சிலரின் தீப்பந்தங்களுக்கும் துப்பாக்கி மருந்து வேட்டைகளுக்கும் இரையாகி வரும் நிகழ்ச்சிகளைக் காண வேண்டும். பார்மோஸாவில் பதுங்கியிருக்கும் சியாங்கேஷேக் பிகிங் நகரத்து அரசியல் சீமான்களுக்கு ஒரு குறியாக இருந்து வருகிறார், கழிந்த பத்தாண்டுக் காலமாக! மனித வர்க்கத்தின் வழிகாட்டியான மாசேதுங் குமாய்த் தீவுகளை நோக்கிக் குண்டு மழை பொழிந்துவிட்டார்! உலகம் சிரிக்கத் துவங்கிய பிறகுதான் அதனை நிறுத்திக் கொண்டார்! அதனைத் தொடர்ந்து திபேத் மலை நாட்டின்மீது கவனத்தைத் திருப்பினார்கள் சீனத்துக் கம்யூனிஸ்ட்கள்! மத்தியக் கிழக்கு நாடுகளில் மாஸ்கோவின் பிடி தளர்ந்து வருவதையும், மாவீரன் என்று அரபு தேசீய மக்கள் புகழும் நாசர் குருஷ்சேவையும் குட்டத் துணிந்துவிட்டதால் தமது எல்லையோரங்களைத் தணிக்கை செய்துகொள்ளும் வகையில்தான் திபேத் கலவரத்தைத் தூண்டினார்கள்! லாசா நகரத்திலிருக்கும் பீகிங் சர்க்காரின் பிரதிநிதி சென்ற திங்களில் திடீரென்று ஒரு நாள் தலைலாமா அவர்களை விருந்துக்கு அழைத்தாராம். ஒரே ஒரு நிபந்தனை—தன்னுடன் எவரையும் லாமா அழைத்து வரக் கூடாது! விசித்திரமான விருந்தையும் விநோதமான அந்த அரசியல் ஆணையாளரையும் லாமாவைத் தங்கள் மதத் தலைவராகவும் பாபங்களைப் போக்கும் மகானாகவும் நம்பி வணங்கி வரும் எண்ணற்ற திபேத்தியர்கள் கண்டித்தனர்; லாமாவின் இல்லத்தருகே கூடி நின்று தங்களின் எதிர்ப்பை எடுத்துக் காட்டினர். விருந்திலே தான் கலந்து கொள்ளப் போவதில்லையென்று மக்களுக்கு உறுதி கூறினார்; செயல்பட்டார்! சீன சர்க்காரின் ஏஜண்டுக்கு அவமானம்—திரண்டு நின்ற திபேத்தியர்மீது ராணுவத்தை ஏவினான். லாமாவின் தங்குமிடத்தையும் தாக்கினான்—இந்தியத் தூதுவரின் இருப்பிடம்கூடத் துப்பாக்கி குண்டுகளின் குறிக்குத் தப்பவில்லை! அடிமை முறிச் சீட்டிலே கையொப்பமிட்டிருந்தாலும் அத்தனைத் தன்மான உணர்வும் எழுச்சியும் முறிந்து போகாத காரணத்தால் திபேத் நாட்டவரும் சீனப் படைகளை எதிர்த்துப் போர் துவக்கினர்! மருட்சியுற்ற மாசேதுங் சர்க்கார் திபேத்திய சர்க்காரைக் கலைத்தது. பதினெட்டுத் தலைவர்கள் நீக்கப்பட்டனர். 4000-க்கும் மேற்பட்ட புரட்சிக்காரர்கள் கைது செய்யப்பட்டனர்!

சீனத்துக் கம்யூனிஸ்ட்கள் மார்க்சிச லெனினிசத் தத்துவப் பாதையிலே தங்கள் தாயகத்தைப் பண்படுத்துவதாகச் சில ஆண்டுகளாகப் பேசிக்கொண்டாலும், சியாங்கே ஷேக்கின் கோமின்டாங் சர்க்காரைத் தொலைக்கப் பலவகையான கொரில்லாப் போர் முறைகளைத்தான் பின்பற்றினர். சீனத்து ஆட்சியைக் கைப்பற்றிய பின்பும் புதிய சீனாவை உருவாக்கும் திருப்பணியில் புதுப் புது மாற்றங்களைத் தருவித்தனர்! இவைகளிலே மயங்கிவிடாத திபேத் மக்கள்தான் மாசேதுங்கின் ஆதிக்கத்தை எதிர்த்து அடிமை விலங்கொடிக்கத் துடிக்கும் தேசீய எழுச்சியைத் தோற்றுவித்துவிட்டார்கள்! மாசேதுங்கின் ஆட்சி முறைகளிலே பல வகைகள் நம் மாலே மன்னிக்க முடியாதவைகள் — கம்யூனிசக் கல்வி முறையை வளர்க்க அவர்கள் கையாண்ட அடக்கு முறைக் கொடுமைகள் — ஆசிரியர்களுக்குப் பாடம் புகட்டி அதனைத் திரும்ப மாணவர்களுக்குத் தெரிவித்த செயல்கள் முதலியவை நல்லவர்களாலே கண்டிக்கப்பட்டன. "Mind Murder in Mao Land" என்ற புத்தகம் பலப்பல பயங்கரச் செய்திகளை உலகுக்கு அறிவித்துள்ளது! சியாங்கே ஷேக்கின் சீரழிந்த ஆட்சியிலே வேதனைப்பட்ட மக்கள் பொதுவுடைமையர் வருகையால் புது வாழ்வு மலரும் என நம்பினர். ஆண்டுகள் பல கடக்க வேண்டும் என எண்ணவில்லை. கம்யூனிஸ்ட்களின் புது வேகத்தைப் பொறுக்க முடியாமல் எதிர்த்த எண்ணிலடங்கார் கொல்லப்பட்டனர். இரத்த வெள்ளத்திலே மிதந்தனர். ஏழை விவசாயப் பாட்டாளிகள் சிந்திய இரத்தத்தினால்தான் சீனா சிவப்பாகியது என்ற உண்மையும் இன்றைய தினம் திபேத்திய மக்களின் கண்ணீர் வெள்ளத்திலே தென்படுகிறது. "China is Red from Peasants Blood" என்ற நூல் உலகத்து அறிஞர்கள் பலரின் சிந்தனைக்கு வேலையைத் தந்ததும் அதனால்தான்! மாசேதுங்கின் சீனா மறு மலர்ச்சி பெற்றுள்ளது. ஆனால் மக்கள் மனிதர்களாக இல்லை; மிருகங்களாகவே மதிக்கப்படுகின்றனர் என்று டாக்டர் சந்திரசேகரன் கூறிய கருத்துக்களை உறுதிப்படுத்தும் வகையில்தான் திபேத்திய மக்களுடைய துயரக் கதைகள் தெரிவிக்கின்றன! சாந்த சொரூபி சௌஎன்லாய், பாண்டுங் மாநாட்டிலே முக்கியப் பரந்தாமன்; பண்டித நேருவின் பங்காளி. அவர், ஏன் திபேத் நாட்டு எழுச்சியை ஏற்க மறுக்கிறார்? அவர்களை எதிரிகளாக்கி, காடு மேடுகளில் ஓட ஓட விரட்டுவது ஏன்?

திபேத் நாட்டிலே புரட்சி பொங்கி விட்டதென்றாலும், அதனைக் கலகக்காரர்களின் தூண்டுதல் என்றுதான் பீகிங்ரேடியோ சொல்கிறது. "இந்திய நாட்டு எல்லையிலுள்ள காளிம்பாங் நகரம்தான் ஏகாதிபத்திய ஒற்றர்களின் தங்குமிடம். அங்கிருந்துதான் சதிக்கூட்டம் வேலை செய்கிறது" என்றெல்லாம் நவசீனத்துச் செய்தி நிலையம் அறிவிக்கிறது. உலகத்திலேயிருக்கும் அத்தனைக் காம்ரேடுகளும் தங்களை எதிர்த்து எவராவது ஏதாவது பேசிவிட்டால் அதை உடனே ஏகாதிபத்தியங்களின் தூண்டுதலாக்கிவிடுகின்றனர். ஏகாதிபத்தியங்களை எதிர்த்துக்கொண்டிருக்கும் நாசர்கூட அவர்கள் தூண்டுதலின்பேரில்தான் மாஸ்கோவை எதிர்க்கிறார் என்கிறார்கள். எவராலே இதனை நம்பமுடியும்? நட்புரிமை கொண்டுள்ள இந்தியாவை சீனத்துக்கு எதிரான சதிக்கூடம் என்று சீன சர்க்கார் சொல்லிவிட்டதாலே பிரதமர் நேரு பார்லிமெண்டில் பேசும்போது சொன்னார், "காளிம்பாங் நகரம் சீனாவுக்கு எதிரான முகாமல்ல" என்று! ஆனால் மீண்டும் மீண்டும் கம்யூனிஸ்ட் சீனா குற்றம் சாட்டியது. கலகப்படைக்குக்களமாக இருப்பது காளிம்பாங் நகரமென்று! மக்கள் சபையிலே உறுப்பினர்கள் சீன சர்க்காரின் அவதூறுகளைக் கண்டிக்க வேண்டுமென அவசரத் தீர்மானங்கள் கொண்டுவந்தனர். பாபம்—பரிதாபத்துக்குரிய பண்டிதர் அவர்கள் அவசரப்படக் கூடாதென்று ஆய்வுரைகள் தந்தார்! இந்தியாவில் சதிகாரர்களின் கூடாரமென்று சொன்ன பிறகும், மாசேதுங் நடவடிக்கைகளைக் கண்டிக்க பார் புகழும் பண்டித நேருவாலே முடியவில்லை! திபேத்திலே நாசவேலைகள் செய்துவிட்ட நவசீனத்தவர்கள் நன்றிகெட்டவர்களும்கூட என்பதனை மக்கள் சபை உறுப்பினர்கள் சான்றுகளுடன் விளக்கினர். ஆண்டுபலவாக ஐக்கிய நாடுகள் அவையில் இடம் பெற லாயக்கற்றதாகக் கருதப்படும் சீனாவை ஆதரிக்கும் இந்தியாவுக்குச் சீனத்துக் கம்யூனிஸ்ட்கள் தருகின்ற பட்டம் கலகக்காரர்களின் சதிக்கூடாரம் என்பதாகும்! பண்டித பந்த் பதறிப்போய் பேசியிருக்கிறார். பலன் இதுதானா என்று வருந்தியிருக்கிறார்! பஞ்சசீலத் தத்துவங்களை உலகத்துக்குப் போதிக்கும் இரு பெருந்தலைவர்களை வைத்துள்ள கம்யூனிஸ்ட் சீனா, இந்தியாவைக் கலகப்படை நாடாக்கிவிடுவது தான் திபேத்திலே செய்துவிட்ட நாசவேலைகளை மறைப்பதற்கும் மாநிலத்தில் மக்கள் மனதிலேயிருந்து மறக்கச் செய்வதற்குமே ஆகும்!

திபேத் விவகாரம் இந்திய சர்க்காருக்கும் சீன சர்க்காருக்கும் சம்பந்தப்பட்ட ஒரு விவாதத்துக்குரிய பிரச்னையாக இருக்கிறது. இந்திய உபகண்டத்திலும், வெளி உலகிலும் உள்ள ஒவ்வொருவருக்கும் இது பொதுப் பிரச்னை என்பதிலும் எந்தவித மாறுபாடும் இல்லை! முடிவுகளையும் விளைவுகளையும் பொறுத்திருந்து காண வேண்டும்! ஆனால் இந்தியக் கம்யூனிஸ்ட்கள் தங்களுடைய பரம்பரையான அடிமைப் புத்தித் தன்மைக்கேற்பத் திபேத்மீது செஞ்சீன சர்க்கார் எடுத்த இராணுவ நடவடிக்கையை ஆதரித்தும், காளிம்பாங் நகரம் சதிக் கூடாரம் என்ற உண்மையை நேரு மறைப்பதாகவும் விளக்கி அறிக்கை வெளியிட்டுவிட்டனர். பீகிங் நகரத்து தட்பவெட்ப நிலைகளுக்கேற்பத்தான் இந்தியக் கம்யூனிஸ்ட்களின் உடல் நிலையில் மாறுதல் ஏற்படும் என்பதற்கு இதைவிடச் சிறந்த சான்று வேறென்ன வேண்டும்? இந்தியத் துணைக் கண்டத்திலேயுள்ள மற்ற அரசியல் கட்சிகள் எல்லாம் திபேத் நிலைமையை அமைதியாககவனித்துக் கொண்டு வரும்போது கம்யூனிஸ்ட் கட்சிமட்டும் தன் ஏஜன்சி வேலையை உடனே செய்துவிட்டது! நேருவின் மறுப்புரைகளினால்இந்திய சீன நட்புறவு பாதிக்கப்பட்டு விடுமாம்! திபேத் மக்கள் கொல்லப்பட்ட கொடுஞ் செய்தி இந்தியக் கம்யூனிஸ்ட்களின் இதயத்தைத் தொடவில்லை. நேருவுக்கும் தங்களின் எஜமானர்களான மாசேதுங், சௌ-என்லாய்க்கும் மனமுறிவு உண்டாகிவிடுமாம்! கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழு அறிக்கையைத் தமிழ் நாட்டுக் கமிட்டியின் பத்திரிகை பத்தி பத்தியாக வெளியிட்டுத் தன்

கடலரசன்

— 9-ம் பக்கம் —

திபேத்தில் சிக்கல்

— சென்ற இதழ்த் தொடர்ச்சி —

1910-ல் சீனு மறுபடியும் லாசாவின் மீது படை எடுக்கவே தலைலாமா டார்ஜிலிங்கிற்குத் தப்பி ஓடினர். அங்கும் இடையூறு ஏற்படவே மங்கோலியாவுக்கு ஓடி மறைந்து வாழ்ந்துவிட்டு ஓராண்டுக்குப்பின் லாசாவிற்குத் திரும்பினுர். அன்று முதல் சீனப் பகைவரான தலைலாமா, மறுபடியும் 1917-ல் தாக்கப் பெற்ருர், சீனுவால். என்ருலும் வென்ருர் லாமா. முதலாம் உலகப் போர் முடிந்தபின் சீனு லாசாவில் பிரித்தானியர் பெற்றுள்ள செல்வாக்கை விலக்க முயன்றும் ஏதும் இயலவில்லை. பிரித்தன் சீனுவை அஞ்சச் செய்தது. திபேத், சிக்கிம், பூட்டான் ஆகியவற்றில் கால் வைக்கவும் கூடாது என்று கண்டித்தது பிரித்தன். ஆனுலும் ஆழிபோல் பிறர் தலையீடுகள் திபேத்தில் நுழைந்துகொண்டே இருந்தன. 1641-ல் ஐந்தாவது தலைலாமா, சீனுவிற்குச் சென்ருர். அன்றிருந்த சீன அரசன் அவரைத் தனக்கு ஒப்பாக வரவேற்கவும் செய்தான். 18-ம் நூற்ருண்டிலோ ஆதிக்கம் லாசாவில் வலுத்தது. சீன அரசனின் பிரதிநிதியாக ஒருவன் லாசாவில் "**அம்பன்**" என்ற பதவிப் பெயருடன் நுழைந்தான். அப்பதவி பல காலம் அங்கிருந்தது.

செஞ்சீனம் காண்பதற்கு 1934-ம் ஆண்டில் மாசேதுங் ஏனுன் நோக்கிச் சென்ற கால்நடைப் பயணத்தையும் அதன் விளைவுகளையும் முன்பே குறித்துள்ளோம் (தென்றல் 14-3-'59). ஏனுனுக்கு திபேத்தின் வழியாக மாசேதுங் செல்வதைத் தடுத்துவிட்டார் அப்போதைய லாமா. தன் பெருமுயற்சியில் இடையிட்டதனுல், திபேத்தைப் பழிவாங்கக் காலம் பார்த்திருந்தார்,மா. 1949-ல் மாவின் ஆட்சி சீனத்தில் எழுந்ததும், அடுத்த ஆண்டே அவர் திபேத்திற்குள் நுழைந்தார்.

அந்த 50-ம் ஆண்டில் தலைலாமா (இப்போதுள்ளவர்தான்; ஆனுல் அப்போது வயது 15தான்) தலை தப்ப ஓடினுர், சிக்கமின் எல்லைப் பகுதியில் உள்ள யாட்டுங் என்ற ஊருக்கு. 1951 மேயில் பீக்கிங்கில் ஏற்பட்ட உடன்படிக்கையால் தலைலாமா லாசாவிற்குத் திரும்பினுர். அந்த உடன்படிக்கையின் முக்கியக் கருத்துக்களாவன: (1) திபேத் தனது வட்டாரத்தில் தன்னுட்சி உரிமையைப் பெறும். (2) உள்நாட்டைப் பொருத்து தலைலாமாவும் அவரது அமைச்சரவையும் செய்யும் முடிவுகளே செயல்படும். (3) திபேத்தின் வெளிநாட்டுக் கொள்கைகளை வகுப்பதையும், வெளி நாட்டுத் தொடர்புகளை வரையறுப்பதையும் செஞ்சீன நடு அரசே செய்யும்.

அம்பன் எனப்பட்ட அரசப் பிரதிநிதிக்குப் பதில் "**கமிசார்**" எனப்படும் சிவப்பு அதிகாரி நுழைந்தார், இங்கு. சீனப் படைகள் "திபேத்தைக் காப்பதற்காக" உள்ளே நுழைந்தன. தலைமாலாவின் பழம் படைகள் வேட்டையாடப்பட்டன. தலைலாமாவின் நிலை, "நாளும் தொல்லை; ஆனுலும் நீடுழி வாழ்வு!" என்ருயிற்று. பஞ்சன்லாமா என்ற வாள் மயிரில் கட்டப்பட்டு தலைலாமாவின் தலைமேல் தொங்கியது. என்னேரமும் அஞ்சி அஞ்சிச் சாக வேண்டியவரானுர் தலைலாமா. இங்கு ஒரு சீனப் படைக் குழுவும், ஆட்சிக் குழுவும் அமைக்கப் பெற்றதோடு, படைகளின் தலைமை நிலையம் (Military head-quarters) ஒன்றும் அமைக்கப் பெற்றது.

"வாழும் புத்த"ரான தலைலாமா வாடும் நிலை எய்தினுர். சீனர்கள் புதுப் புதுப் பாதைகளையும் விமான நிலையங்களையும் உண்டாக்கினர். படை என்று ஒன்றிருந்தால் அது வந்து போக வசதி வேண்டாமா? **துப்பாக்கி முனையில் மிரட்டப்படும் ஆட்சிக்குப் பெயர்தான் சுயாட்சியாம்! புதிய பொருள் போதிக்கின்றனர்; நம்புங்கள்!**

கம்பாக்கள்

இந்நாட்டு மக்களுள் சிலர் வாழ்க்கைக்கு வேறு வழி ஏதுமற்று வணிகர்களையும் அரச அலுவலர்களையும் கொள்ளையடித்து வாழ்ந்தனர். குதிரைகளில் அலைந்துகொண்டு கண்ணில் தட்டுப்படுவோரைத் தட்டிப் பறித்து வருதலே அன்னுரின் அலுவலாயிற்று. இவர்கள் சீனப் படைஞர்களையும் கொள்ளையடித்தழிப்பர் என்ருல் இவர் தம் வலிவும் துணிவும் புலப்படும். இவர்களது எல்லைப் பகுதியை 1934-ல் கடக்க முயன்ற போதுதான் மாசேதுங்கின் தொண்டர்கள் பன்னூறு பேர் கொல்லப் பட்டனர்.

1956-ல் பல ஊர்களில் சீனப் படையினர் மறைந்திருந்து கம்பாக்களைத் தாக்கினர். கம்பாக்களுக்குக் கொள்ளைதான் தொழில் என்ருலும், சீனர்கள் ஆட்சியை எதிர்ப்பதில் எப்போதும் முன் நின்றனர். '56-ல் சீனர்கள் மறைந்திருந்தனர்; எல்லாக் கம்பாக்களும் தம் வழக்கம்போல் கோடையில் ஓரிடத்தில் கூடினர் முகாமிட்டு; உடன் பின்புறமிருந்து சுற்றிச் சுற்றி வேட்டையாடினர் சீனப் படையினர்; விண்ணிலிருந்து குண்டு மழையும் பொழிந்தனர். கம்பாக்களுள் தப்பித்தோர் கார்டெஸ் என்ற இடத்திலுள்ள தளத்தை நாசமாக்கினர். வேறு சிலர் அவ்விடத்திற்கு வரும் பாதைகளைத் துண்டித்துச் சிதைத்தனர். கண்ணில் பட்ட சீனர்களையெல்லாம் பழிவாங்கினர். கார்டெஸ்ஸிலிருந்த சீனர்க்கு விமானம்மூலம் உணவும் கருவியும் கொட்ட வேண்டி வந்தது.

திபேத்தியரைக்கொண்டே கம்பாக்களை வீழ்த்தப் படை திரட்ட முனைந்தனர் "**கொள்ளைக்காரக் கம்பாக்**களுக்கு எதிராக எவரும் படையில் சேரவில்லை இதனுல் கம்பாக்களை நாட்டு விடுதலைக்குதவுவோர் என திபேத்தியர் நம்பியுள்ளதை அறிக.

கம்பாக்களால் தொடர்ந்து தாக்கப்பெற்ற சீனர்கள் தங்கள் கம்யூனிச வேலைத் திட்டங்களை ஆறு ஆண்டுகள் தள்ளி வைப்பதாகவும் கூறினர். பல சீனர் விடு திரும்பினர்.

ஆனுலும் முழு நம்பிக்கை பெருத கம்பாக்கள் முன்போல் பள்ளத்தாக்குகளில் கூடாது, லாசாநகரையடுத்த திறந்த வெளியில் கூடினர்.

வெடி மருந்துகளால் பயனற்றுப் போனதால், தலைலாமாவைப் பயன்படுத்தினர். அவரது தூதுக் குழுவினரைக் கம்பாக்களிடம் அனுப்பி, சீனர் ஆட்சியை ஏற்கச் சொல்லினர். கம்பாக்கள் மறுத்துவிட்டனர். தூதுக் குழு தோல்வியுடன் திரும்பியது. சினந்த சீனர் தலைலாமாவின் பாதுகாப்புப் படையினரான 5000 பேரையும் கம்பாக்களை அழிப்பதற்குச் செலுத்தப் பணித்தனர். லாமாவோ மறுத்துவிட்டார்.

லாமா மறுத்தபோதும், லாசாவில் இருந்த 55000 மக்களும் நூற்றுக் கணக்கான புத்த பிக்குகளும் உணர்வுடன் கிளர்ந்தெழுந்து புத்தாண்டைக் கொண்டாடக் கூடியிருந்தனர். அதனை ஒட்டி சீனப் படைத் தலைவனின் கட்டளை வந்தது, **தலைலாமா அவனைத் தனியே வந்து காணவேண்டும்** என்பதாக. லாசாவின் மக்கள் அனைவரும் தலைலாமாவின் மாளிகை முன் திரண்டு அவர் தனியே செல்லக்கூடாதென்றனர். அவரும் போகவில்லை. அதே பொழுது திபேத்தியப் பெண்டிர் 5000 பேர் இந்தியத் தூதுவர் அலுவலகத்துக்கு முன் வந்து லாமா பேட்டிக்குச் செல்ல நேரிட்டால் இந்தியத் தூதர் அப்போது உடன் இருக்க வேண்டும் என்றும், 1951-ம் ஆண்டைய திபேத்திய சீன உடன்படிக்கைச் சரியாய்ச் செயல்படுகின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும் என்றும், சீனப் படையை வாபசாகுமாறு வற்புறுத்த வேண்டுமென்றும் கேட்டனர்; வேண்டினர். இந்தியத் தூதுவரோ ஏதும் பேசவில்லை. எதைத்தான் செய்வார், நேரு மாமாவின் ஆள்?

1950! காலத்தோடு ஒட்டி அறிவியல் வளர்ச்சி பெற்றுவிட்ட சீனம் செஞ்சீனமாகி ஓராண்டான நிலை. திபேத் வசதிகள் அற்றுப் போனதால் பழைய குருடியாகவே இருந்தது. சீனப் படைகள் திபேத்தில் நுழைந்துவிட்டன. தலைலாமா தத்தளித்தார்; துடித்தார்; அவரது அவை கூடிற்று. நீர் நிறைந்த தங்கக் கிண்ணி ஒன்றில் இரண்டு பந்துகளைப் போட்டனர் ஒன்று மிதந்தால் உடனே தலைலாமா இடம் மாற வேண்டும். அடுத்தது மிதந்தால் தலைலாமா லாசாவிலேயே இருக்கலாம். பந்துக்குறி. உடனே லாமாவைப் புறப்படச் சொல்லிற்று வேறிடம் சென்றது தலைலாமா கோஷ்டி. இந்திய எல்லைக்குப்பந்துக்கல் தொலைவிலுள்ள ஒரு மடத்திற்கு வந்து சேர்ந்தனர் அந்த மடம் சிக்கிமிற்கும் அருகில் உள்ளது. ஏழு மாதங்களுக்குப் பிறகு லாசாவுக்குத் திரும்பினுர் தலைலாமா. பஞ்சன்லாமா சீனரின் செல்லப் பிள்ளையாகிவிட்டதால், இவர் இக்கட்டான நிலைக்கு ஆளானுர். சீன அரசினருடன் தொடர்பு கொள்ளத் தொலை பேசி ஒன்று, தலைலாமாவின் மாளிகையில் வைக்கப்பட்டது கமிசாரின் அதிகாரங்கள் மிகுந்தன. லாமாவின் மந்திரி சபையான "கஸ்காஹ்" என்பதையும் சீனர் ஆட்டி வைத்தனர். 1951-ல் 17 அம்சங்கள் கொண்ட திபேத்திய-சீன ஒப்பந்தப்படி, தலைலாமா எதையும் அவர்களைக் கலந்தே செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அவரின் அதிகாரங்கள் பலவும் படிப்படியாக சீனரின் பொம்மையான பஞ்சன்லாமாவின் கைகளுக்கு மாற்றப்பட்டன.

— 10-ம் பக்கம் —

★ ★ ★

களவும் கற்பும்

மஞ்சத்தில் வீற்றிருந்தாள் மயிலாள் நங்கை
மருளவில்லை மான்விழியாள் மயங்க வில்லை
கொஞ்சத்தான் நான்சென்றேன் ஒயிலாள் அன்று
கொந்தளித்த நிலையிலில்லை கோபம் இல்லை
அஞ்சுகமே ஆருயிரே அன்பே என்றன்
ஆற்ருத காதலினை அறிவாய் என்றேன்
நெஞ்சத்தால் நேசித்தீர் நேர்மை என்ருல்
ஏற்றிடுவேன் தொழுதெழுவேன் என்றே சொன்னுள்.

கோபிக்கத் தெரியாத கொஞ்சும் கன்னம்
கோப்பையிலே ஊற்றிவைத்த மதுவே திண்ணம்
சோபித்துச் சோர்வதனைப் போக்கும் எண்ணம்
சோம்பேறி வாழ்நாளும் ஏற்கும் வண்ணம்
காப்பியத்தில் காணுத கனிவாய் அன்னம்
காவியத்(து) அழகியெனச் சொல்வார் முன்னம்
நாப்பேசும் நளினத்தால் ஈர்த்தாள் பெண்ணும்
நாட்டமதைப் பேசியதே நங்காய் கண்ணும்

உளமதனைக் குளுமையுற அன்பை ஊற்றின்
உண்மையிலே வருணனைகள் வேண்டாம்; உள்ளக்
களவுநிலை இணைந்துபெறும் கனிந்த இன்பம்
காலைவரின் மாய்ந்திடுமாம் மெய்யோ பொய்யோ?
தளர்ந்திடவே கற்புநிலைத் தனியா ளாக்கித்
தவித்திடவே செய்யாதீர் அத்தான்; என்றும்
விளங்கிடவே நம்காதல் இன்பம் பொங்கத்
திருமணமே புரிந்திடுவீர் விரைவில் நன்றே!

கற்புநிலை காவியத்தில் காண்பார் பின்னே
கனிமொழியே சிந்தித்துக் கேளாய் முன்னே
பொற்புடைய வாழ்க்கையினைக் கண்டார் அன்று
பொறுமையுடன் களவுநிலை போந்தார் வென்று
இற்செறித்தால் உடன்போக்கை இனிதே நாடி
இன்பத்தைத் துய்த்தனராம் விரைந்தே ஓடி
கற்புநெறி தவருமல் வாழ்வோம் சென்று
கவலையினை விடுத்திடுவாய் கண்ணே இன்று.

—அரிமழம் இராம. கணபதி



வாழ்விலே அது ஒரு திருப்புமுனை; பருவ வெற்றி; ஆமாம். கனவுக் கூட்டங்களிலே மிதக்கின்ற இளைஞன், தனக்குத்தானே ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுப்பான்; அவளோடு கொஞ்சு மொழி பேசுவான்; சிறு பிள்ளைத்தனமான விளையாட்டுக்கள் எதை எதையோ செய்வான் ஆனால் அத்துணையும் கனவுக் கொத்துக்கள் தாம்; விழைவுப் படலங்கள்தாம்.

முகத்தில் துளிர்க்கின்ற வியர்வைத் துளிகளைக் கொண்டு தாகத்தை அடக்கிட முடியுமா? ஆனால் வியர்க்க வியர்க்க ஓடி அலைந்தால் தானே நீருற்றைக் காணமுடிகிறது. நெஞ்சத்தில் கொப்பளிக்கும் ஆசைக்கனவுகளால் பருவதாகத்தை மாற்றிவிட முடியாது. ஆனால் ஆசைகள் கொப்பளிக்கக் கொப்பளிக்கத் தான் மனிதனின் முயற்சிகள் விரைகின்றன. ஏதாகிலும் ஒரு முடிவு ஏற்படுகிறது.

ஆனால் என்னைப் பொருத்த வரையில் நான் ஆசைக்கனவுகளில் மிதக்கவுமில்லை. கற்பனை செய்யத் தெரியாமல், வரண்ட தத்துவக்காட்டில் திக்குத்தெரியாமல் அலையும் பிறவியுமல்ல நான். வாழ்க்கைக்கு எனச் சில விதிகளை இயற்கை வகுத்து வைத்திருக்கிறது. அதன் படிச் சகடம் ஓட்டும். வருவது சங்கடமோ – சந்தோஷமோ, எது வானாலும் ஏற்றுக்கொள்கிறேன். என் வாழ்க்கை இப்படி அமைந்து விட்டது நான் எதிர்பார்த்தோ, எதிர்பாராமலோ மெத்தை இருந்தாலும் பாயிலேயே படுத்துப் பழகிவிட்டேன். பூமெத்தையே பழக்கமாகிவிட்டால், அது கிடைக்காத நாளில் தூக்கமே வராமல் தொல்லைப்பட நேருமே. அதனால்தான் பாயில் கிடக்கிறேனே ஒழிய, "எளிமையாளன்" என்ற பட்டம் சூட்டிக்கொள்ள அல்ல. இதற்குமேல் என் அகநிலை பற்றி முகவுரை தரவேண்டியதில்லை. சுய புராணம் நீளக்கூடாதல்லவா!

நான் ஒரு டாக்டர். பல மக்களது உயிரை என் கழுத்திலே தொங்கும் ஸ்டெதஸ்கோப்பில் வைத்துக்கொண்டிருந்தேன். அன்றாடம் மனிதக் கூட்டத்தைச் சந்திப்பதும், முடிந்த மருந்தைத் தருவதும், நோயாளி குணமானால் மகிழ்வதும், பிணமானால் அதை மறப்பதுமாக இருந்தேன். "எனக்கு வயதாகிவிட்டது; திருமணம் செய்துகொள்ள வேண்டும்" என்பதை என் தந்தை சொல்லித்தான் தெரிந்துகொண்டேன். தொண்டாகவோ, தொழிலாகவோ நான் ஈடுபட்டிருந்த பணி என்னை மறக்கச் செய்திருந்தது.

"தம்பி, நாம் இப்பொழுது ஏதோ நல்ல நிலையிலிருக்கிறோம். ஆனாலும் முன்னாள் நிலையை மறந்து பெரிய இடங்களைத் தேடுவது தவறு. நேற்று எனது பழைய தோழர் ஒருவரைக் கண்டேன். அவர் வளமும் நலமுமாக இருக்கையில் பத்தாண்டுகளுக்கு முன் பார்த்ததுண்டு. இப்போது வாழ்க்கை ஒரு போராட்டம் என்ற தத்துவத்தை உணர்ந்து அதில் தோல்வி கண்டவராய்த் திரிகிறார். பொருள் கரைந்து, பழைய வீட்டையும் இழந்து இப்போது எங்கோ ஒரு மூலையில் கிடக்கிறார். வறுமையின் கோடுகள் – இழிவின் சின்னங்கள் – நடைமுறையின் முத்திரைகள் அவர் முகத்தைக் கொத்திக் கிழித்திருக்கின்றன. வயதான பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க முடியாமல் திண்டாடுகிறார். பருவமடைந்த ஒரு பெண்ணை ஏழெட்டு ஆண்டுகள் வீட்டில் வைத்திருப்பதைவிடக் கொடுமை வேறு ஏதும் கிடையாது. அவளை அணுவுக்கணு காப்பாற்றுவதைவிட வேறு வேலை எதுவும் செய்யமுடியாது பெற்றோரால். அவர் பெண்ணைச் சிறு வயதில் பார்த்திருக்கிறேன். நேற்றும் கண்டேன். குடும்பப்பாங்கும் எழிலின் களையும் பொங்கி வழிகின்றன. நல்ல பெண் ஆனாலும் அது நடக்க வேண்டிய நாளில் நடக்கவில்லையே என்ற ஏக்கத்தில் வாடுகிறாள். முகம் அதை நன்கு காட்டுகிறது. உனக்கு விருப்பமானால் சொல். அந்தப் பெண்ணைப் பார்ப்போம். நாம் ஒரு நல்ல உதவியைக் காலத்தில் செய்யவும் முடியும். உனக்கு மணம் முடித்த அமைதியும் எனக்குக் கிட்டும். என்ன சொல்கிறாய்?

அத்தோடு தம்பி...என் வாழ்வு முடிவதற்குள் ஒரு பேரனைக் கண்டுவிட்டால், அது போதும். அதற்குத்தான் உன்னை விரைவுப்படுத்துகிறேன்."

இப்படித் தன் பேச்சை முடித்தார், தந்தையார். நானும் நினைத்துப் பார்த்தேன். அப்பாவுக்கு வேண்டியவரின் பெண், மாப்பிள்ளை கிடைக்காததால் வாழ்வை இழந்துகொண்டிருக்கிறாள். அவளைக் காப்பாற்ற வேண்டியது நம் பணி.

வாழ்க்கையிலே பல பேரைச் சந்தித்துவிட்டேன். உணர்ச்சி கொப்பளிக்கும் வயதில் ஒரே ஒரு வேலியைத்தான் அமைக்கமுடியும், பெண்களுக்கு. திருமணம் என்ற வேலி காலத்தே அமையப் பெறாததால் பாழான பசும் பயிர்கள் எத்துணையோ? சாக்கடையில் கிடக்கும் சிசுக்களும், குளத்தில் மிதக்கும் பெண்களும் அடிக்கடி என்னிடம் தானே கொண்டு வரப்படுகின்றனர். கடந்த திங்கள் மருத்துவ மனைக்கு வந்தவள் அவர்களைவிட எவ்வழியில் நல்லவள்தான். பருவம் கொந்தளிக்கும் அவள் பல நாள் பசிக்காரியாய் இருந்தாளாம். அலை மோதிய ஆசைகள் விலைமதிப்பற்ற பெருமையைக் கலைத்துவிட்டன. எவனோ "பாலன்னம் பருகலாம், பளிங்கு நிலாமுற்றத்தில்!" என்று அழைத்தானாம். கிளர்ந்தெழுந்த உணர்ச்சி அலைகளால் நிலை தளர்ந்துவிட்டாள்; ஏமாந்தழிந்து போனாள். கூடலின் முத்திரை வெளிப்படையாகத் தொடங்கியதும் அரண்டோடி வந்தாள், சென்னைக்கு.

"டாக்டர்... என்ன செய்வது? எதைச் சொல்வது? ஒன்றுமே தெரியவில்லை எனக்கு. நான் மணமாகாதவள்...எப்படியும் என் மானத்தைக் காப்பாற்றுங்கள்... நெடுந்தொலைவிலுள்ள ஊர்க்காரி நான்... அப்பாவிடம் வேலைக்கு மனுப் போட்டிருந்த இடத்திலிருந்து அழைப்பு வந்துள்ளதாகக் கூறி ஏமாற்றி வந்திருக்கிறேன். நான் வாழ வேண்டியவளானால் என்னைக் காப்பாற்றுங்கள்!"

ஏதேதோ பேசினாள் தொடர்பற்று என்றாலும் இதயத்தின் மொழியை உணர்ந்துகொண்டேன். என்னாலான உதவியைச் செய்து கருவைக் கலைத்துவிட்டேன். தொடக்க நிலையில் இருப்பதால் அதைக் கலைப்பது மெத்த எளிதாயிற்று. கருவைக் கலைத்தவுடன் என் உள்ளம் ஏனோ விபரீதமாய் வேலை செய்தது. "இன்றைக்குக் குழந்தையை அவமானச் சின்னம் என்று கருதி அழிக்கத் துடிக்கின்ற இவளுக்கு என்றைக்கும் குழந்தை இருக்கவேகூடாது. இவள்போலக் கொடுமைக்காரி எவளும் அடுத்த வீட்டார் தம் குழந்தைகளைக் கொஞ்சுவதைப் பார்த்துப் பார்த்து அழ வேண்டும்! படட்டும் வேதனை, மதலையின் தளிர்க்கைகள் தன் மேல் படாததால்! புலம்பட்டும்; அழியட்டும்; அலறட்டும்!" என்று ஆத்திரம் கிளம்பியது. ஆணைக் கண்டித்துக் கேட்டு மணம் செய்துகொள்ள முடியாதவளுக்குக் குழந்தை எதற்கு? மயக்க மருந்தைக் கொடுத்து மருத்துவம் செய்யும் போக்கில் கருப்பையை மூடிவிட்டேன். இனி என்றைக்கும் அவள்... என் கோபம் சட்ட திட்டங்களையும் மீற வைத்துவிட்டது. "ஒரு பெண் புது வாழ்வு நாடினாள்; தந்தோம்; கடன் தீர்ந்தது!" என்று அத்தோடு அவளை மறந்துவிட்டேன். அவள் கூடத் தான் யார் என்று சொல்லவில்லை, வேதனையால்; அவமானம் பற்றிய அச்சத்தால்.

இப்படி அப்பா குறிப்பிட்ட அந்தப் பெண்ணும் நெடுநாள் பசியால் தவறிவிடக்கூடாதே. அத்தோடு நம்மாலான உதவியைச் செய்ய வேண்டுமே! ஒரு கிழமை கழித்துப் பெண் பார்க்க வருவதாக எழுதிப் போட்டார் அப்பா.

பெண்ணைப் பார்க்கச் சென்றேன். வழியெல்லாம் அப்பா வருங்காலத்தை அமைத்துக்கொள்ள வேண்டிய வகைகளை விளக்கினார். நாளும் பல பெண்கள் என்னைப் பார்க்க வருவதுண்டு தம் நோயை நீக்கிக் கொள்ள. ஆனால் இன்றுதான் நான் ஒரு பெண்ணைப் பார்க்கச் செல்கிறேன். அவள் எப்படியிருந்தால் என்ன? அப்பாவுக்குப் பிடித்தமானவள் அவள். அதுபோதும்!

"கெட்டழிந்த பெண்களானாலும் வாய்ப்புத் தரப்பட்டால் தாமும் வாழத் தகுதியுள்ளோரே என்பதைக் காட்டிவிடுவர்!" என்ற சித்தாந்தத்தை அன்றைக்கு எவனுக்கோ போதித்துக்கொண்டிருந்தேன். நான் போதிக்கின்ற அளவில்தான் இருக்கிறேன்; வாழ்க்கையில் கைக்கொள்ளும் அளவிற்கு வரவில்லை.

இன்றைக்கு நான்வாழ்க்கையைத் தொடங்கப் போகிறேன். அவள் எப்படி இருந்தாலென்ன? முறைக்குப் பார்க்கப் போகிறேன். அப்பாவுக்குப் பிடித்தபின் எனக்கென்ன?

காரை விட்டு இறங்கினோம். "வாங்க! வாங்க தம்பி!" என்றார், அப்பாவின் நண்பர் அவரால் ஆன அளவு வரவேற்புகளை நடத்தினார். எனக்குப் பழக்கமில்லாத வேலை. கவிழ்ந்த தலையை நிமிர்த்தாது இருந்தேன். பெண் எங்களை வணங்க வந்தாள். நிமிரத் துடித்தது உள்ளம். ஆனால் வேண்டாத வெட்கம் தடுத்தது. தலையைச் சற்றே நிமிர்த்துப் பார்த்தேன், அப்பாவின் தூண்டுதலுக்குப்பின்! ஐயோ! இதென்ன கொடுமை? விழிகள் ஏன் இருக்கின்றன? நினைவு ஆற்றல் ஏன் இருக்கிறது? இதயத்தில் ஏன் சிந்தனை இருக்கிறது? ஐயோ! அவலமே! நீ என்னைத்தானா கொத்த வேண்டுமா?

அப்பா அழைத்தார், "புது மலர் பூத்திருக்கிறது; அதை உன் மன மலராக்கிக்கொள்!" என்று. கசங்கிய மலர்தான் காத்திருக்கிறது!

அப்பா கூப்பிட்டார், "சுவைக் கனி காத்திருக்கிறது; எடுத்துக் கொள் உன் கையகத்தே!" என்று. எச்சல் கனிதான் காத்திருக்கிறது!

என்ன செய்வது? அப்பாவிடம் எப்படிச் சொல்வது? ஐயோ! அவள் ஏன் தள்ளாடுகிறாள்? நான் ஏன் நடுங்குகிறேன்? அவள் ஏன் என்னை இப்படிப் பார்க்கிறாள்? நான் ஏன் இப்படி அவளை நோக்கி ஓடுகிறேன்? "பிடியுங்கள்! பிடியுங்கள்!" என்ற குரல் என் காதில் அரைகுறையாய் விழுவதேன்? என்ன? எப்படி?

"நல்ல வேளை! மாப்பிள்ளை தாங்கிப் பிடிக்காவிட்டால் விழுந்திருப்பாள்! இன்றைக்குத் தாங்கிப் பிடித்தவர் இனி என்றைக்கும் காப்பாற்றுவார்!" என்று யாரோ சொல்வது என் காதில் தெளிவற்று விழுந்தது. அப்பா அலமந்து பார்த்தார். நான் திணறியவாறே விழியைத் திருப்பினேன். "நம்மாலேதான் கெட்டது ஏற்பட்டது என்று உலகம் தூற்றும். தவறாமல் நீயே அவளைக் கைப்பற்று. எனக்கு இருக்கும் கொஞ்சம் நாட்களுக்குள் **நான் ஒரு பேரனைக் காண வேண்டும்!"** என்றார், என்னைத் தனியே அழைத்துச் சென்ற அப்பா!

தலையாட்டிவிட்டு அவளிருந்த அறைக்குள் சென்றேன். எல்லோரும் வெளியேறினர். அவளை நோக்கி என் கைகள் சென்றன. அவள் என் கைக்குள் தலையைப் புதைத்துக் கொண்டு அழுதாள். கண்ணீரைத் துடைத்துவிட்டேன்.

முன்பே சொன்னேன், "எந்த ஆசைக் கனவுகளிலும் சிக்கி மிதந்தவனல்ல நான்" என்று. ஆனால் இப்போது அப்பாவின் கடமையை நிறைவேற்ற, நான் அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டேன். பேரனைக் காண வேண்டுமென்ற அப்பாவின் ஆசைமட்டும்... அது என்றும் நிறைவேறாத ஒரு கானல்...

–முத்துவேலன்

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

தென்றல்

மலர் 5 ‖ 18—4—59 ‖ இதழ் 44

காளை விழுந்தது; கதிர் எழுந்தது! கனவு பலித்தது!

"வெற்றி! வெற்றி!"

விண்ணதிரும் முழக்கம்! வீரம் பொங்கும் எழில்முகமும், விளங்குபுகழ் மதிநலமும் கொண்ட திறல் மறவனின் இதழ்கள் முழங்கும் எக்காளம்! ரத்த அவிசொரிந்து தியாகவேள்வி வேட்டு வாகைசூடியோரின் ஆனந்தப் பள்ளு! 'நடைமுறையோடு ஒத்துப்போகாது, நாலாவித சுகபோகங்களையும் துய்க்கும் வழியறியாது, தம் மனம்கொண்ட போக்கில் ஆடும் கடையரே! உங்களுக்கு எப்படியடா கிடைக்கும் வெற்றி?" என்று ஏளனம் பேசிய, "மன்மத லேகிய" மயக்கக்காரர்களின் முகத்தில் கரி பூசிய திருவிழா!

தமிழகம் முழுதும் எதிர்பார்த்திருந்த இனிக்கும் சேதி, ஞாயிறு அன்று பரவியது! தலைநகர் பேராட்சித் தேர்தலில் வாகை மிலைந்தனர், வடநாட்டு கூலிகளோடு மலைந்த கழகத்தவர். "பாதயாத்திரை"வந்தனர் பட்டணத்துத் தெருக்களில், பாராளும் மந்திரிமார்! இன்பம் கொட்டக் கொட்ட அதில் நீந்தித் திளைத்தோர், வியர்வை சொட்டச் சொட்ட வீதிவழி வந்தனர்! ஆணவம் கொத்த, "ஆகாது போ!" என்று கையை விரித்தோர், "ஆகா! உங்கள் அடிமைதானே நாங்கள், என்றைக்கும்!" எனக் கூழைக் கும்பிடு போட்டனர்! "போ! போ!" என்ற குரைத்த வாய்கள், "அப்பா! அம்மா!" என்று பாடிப் பார்த்தன. குண்டுமழையைப் பொழிந்தோர். பிணமலையை அடுக்கிக் காட்டினோர், தேர்தல் வந்ததும் பணமழையைப் பொழிந்தனர். என்றாலும் காலக்கோடுகள் காங்கிரசின் முகத்தில் அவலத்தைக் கிழித்துவிட்டன; கழக வரலாற்றில் புதுமையை வரைந்துவிட்டன. தவிர்க்கமுடியாத முடிவுகளின் முதல் முத்திரை சென்னையில் விழுந்திருக்கிறது.

தலைநகரம் தமிழகம் முழுமைக்கும் வழிகாட்டிவிட்டது. 100 இடங்களில் போட்டி இட்ட காங்கிரஸ் 37 இடங்களையும் 90 இடங்களில் மட்டும் போட்டியிட்ட திராவிட முன்னேற்றக் கழகம் 45 இடங்களையும் பெற்றிருக்கிறது. மக்களாட்சிப் பண்புக்குப் பால் வார்க்கும் தி. மு. கழகம் ஒன்றால்தான், சென்னை நகரின் நலனைப் புரக்கமுடியும் என்று சென்னை நகர் வாழ்வோர் இன்று தீர்ப்பளித்துவிட்டனர்! இதை விந்தையோடு காண்பாரும் உளர்; வியப்போடு நோக்குவாரும் உளர்! "தென்றலோ" இதை வியப்புக்குரியதாகவோ, எதிர்பாராததாகவோ கருதவில்லை.

நாட்டு மக்களின் உணர்ச்சிகளையும் செயல்களையும் அன்றாடம் கூட்டிக் கழித்துப் பார்த்து நடைமுறையை அறிவதும், வரும் நாளை எடுத்துச் சொல்வதும் அமைச்சர்களின் கடமைகளாகும! அவர்கள் செய்யத் தவறியதைத் "தென்றல்" செய்திருக்கிறது. காலத்தைக் கணித்துப் பார்த்தது தென்றல்

"15 பேர் தானே வந்திருக்கின்றனர்! என்ன சாதித்துவிடமுடியும்? திரும்ப இந்தப் பதினைந்து பேராகிலும் வந்தால் போதாதா?"

கடைந்தெடுத்த அறிவுக்குன்றுகளின் ஞானச்சுடர்கள் இது! "அறிவுக்கற்றை"களைச் சிதறும் "முழுமதி" நிகர்த்த முகவிலாசம் உடைய 'பிரபு'க்களின் தீர்ப்பு இது!

ஆனால் தென்றல் அன்றே கூறியது! "காலம் கழகத்தின் பக்கம் வருகிறது. சென்னையைப் பொருத்துப் பல வெற்றிகள் கழகத்துக்குக் காத்திருக்கின்றன!" என்பதாகக் கணக்கிட்டது.

அந்த வாசகங்களை எழுத்துக்கு எழுத்து மறுமுறையும் நினைவூட்டுகிறோம்.

"...சென்னை நகரிலே இயக்கம் (தி. மு. கழகம்) பெற்றுள்ள வாக்குகளைக் கவனித்தால் ஒரு மகிழ்வு ஏற்படுகிறது. நீங்கள் நிச்சயம் நம்பலாம்; வரப்போகும் கார்ப்பரேஷன் தேர்தலில் தி. மு. கழகத்தவர் மேயராக இருப்பார்..."

—16-3 57, தென்றல்.

அன்று தென்றல் இதை எழுதியபோது பலர் கேட்டனர் ஏளனமாக. "தென்றல்" ஏன் கனவு காண்கிறது?" என்றனர். இன்று காலம் காட்டிவிட்ட கணக்காலோ கனவு பலித்துவிட்டது. தென்றலின் கூற்று தெற்றென நிதர்சனமாய் விட்டது!

"தென்றல்" எழுதியதை மறவாது மனத்திருத்தி வைத்திருந்த தோழர் பலர் தம் வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கின்றனர். குறிப்பாக, திருக்காட்டுப்பள்ளித் தோழர்களும் கடலூர்த் தோழர்களும் விளக்கமாக எழுதியுள்ள பாராட்டுதல்களுக்கு நம் நன்றி!

அண்ணாவின் தம்பிமார் 45 பேர் சென்னை நகராள வந்துவிட்டனர், ஆணவக்காங்கிரஸ் மூட்டுக்கு மூட்டு அடிபட்டு மூலையில் கிடக்கிறது. பரிதாபம் என்பதற்கு, சென்னைக் காங்கிரஸ் என்று புதுப்பொருள் எழுத நேர்ந்தமைக்குத் "தென்றல்" வருந்துகிறது.

வாகைசூடியுள்ள தோழர்கள் அனைவருக்கும் வருக! வருக! என நல்வரவு கூறுகிறது; வாழ்த்துக்களைப் படைக்கிறது!

அவர் தம் பணிகள் வெல்வனவாகுக!
வாக்களித்த மக்களின் ஆசைகள் நிறைவேறுவனவாகுக!
தி. மு. கழகம் நாளும் வளர்வதாகுக!
மக்களே! உங்கட்கு எங்கள் நன்றியும் வணக்கமும் உரியனவாகுக! ★

திராவிட முன்னேற்றக் கழக

முத்தமிழ் மாநாடு

1959 ஏப்ரல் 18, 19 (சனி, ஞாயிறு) நாட்களில்

காரைக்கால்

தோமாஸ் அருள் திடல், கே. வி. கே. சாமி பந்தலில் நடக்கும்.

தலைவர்: **ம. கி. தசரதன் எம். ஏ.**

திறப்பாளர்: **க. இராசாராம் பி. ஏ.**

அறிஞர் அண்ணா
நாவலர் நெடுஞ்செழியன்

ஈ. வே. கி. சம்பத் எம். பி.	என். வி. நடராசன்
மு. கருணாநிதி எம். எல். ஏ.	க. அன்பழகன் எம். ஏ., எம். எல். ஏ.
கா. அப்பாத்துரையார் எம். ஏ. எல். டி.	கே. ஏ. மதியழகன் பி. ஏ.
ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.	எஸ். முத்து எம். சி.
புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்	இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன்
நடிகமணி டி. வி. நாராயணசாமி	

மற்றும் கழக முன்னணி வீரர்கள் சிறப்புரையாற்றுவர்.

★

கண்ணதாசன், முடியரசன், ரவி, கருணானந்தம், புதுவைச் சிவம், துறையூர் ஈ. அலி
ஆகியோர் பங்குகொள்ளும் கவியரங்கம் கூடும்.

★

18-4-'59 இரவு 10-மணியளவில்

கலைஞர் கருணாநிதி எம். எல். ஏ.

நடிக்கும்

உதயசூரியன்

நாடகம் நடக்கும்.

வருக! வருக!

என். எஸ். இளங்கோ,
வரவேற்புக்குழுத் தலைவர்.

ப. அ. கரீம்
ந இராமசாமி
செயலாளர்கள்.

அடுத்த இதழில்...

சென்னைப் பெருநகராட்சித் தேர்தலில் வென்ற தோழர்களுக்கு நிகழ்ந்த பாராட்டு விழாக்களின் புகைப்படங்கள் வெளிவரும்.

தென்றல் நண்பர்களுக்கு!

இப்போது வெளியாகும் விருத்தப் போட்டிக்கடுத்து சதகப் போட்டி நிகழும் தோழர்கள் ஏதேனும் சதகச் செய்யுள் இனி மனம்போல் எழுதுக. விருத்தப் போட்டி இருந்த இடத்தில் தோழர்கள் எழுதும்

சதகச் செய்யுள்கள்
இடம் பெறும்.

இறுதி நாள்: 8-5-'59.

தென்றல் : : சென்னை - 6.

சிவகெங்கைச் சீமை

பாளையங்கோட்டைச் சிறையில் வாடிய ஊமைத்துரை வெள்ளையரின் பலியாகிருன். சிறகொடிந்த பறவையாய், சிறப்பிழந்து நின்ற மன்னன் சிவகெங்கைச் சீமையின் உதவியை நாடித் திட்டம் வகுக்கிருன். அவலம் வழிய அழுது நொந்த சிவந்த விழிகள், "ஆதரவு கிடைக்காதா? ஆளும் உரிமையைப் பெருேமா?" என்று ஏங்கித் தவிக்கின்றன. வாழ்ந்தது ஒரு காலம் என்ருலும், பிறரின் உதவியைக் கேட்டுப் பெற்று மீளவேண்டிய நிலைக்கு வந்துவிட்டதே என வாடுகிருரா, இந்த ஊமைத்துரை?

இத்திரைப் படத்தில் சிரிக்க வைத்துச் செழுமையான கருத்துக்களை தரும் பணியினை ஏற்றுக்கொண்டிருப்பவர்களுள் ஒருவர் இவர். காக்காமூக்கையாத்தேவர் வருகிருர் என்ருல் உடன் நகைச்சுவை வெள்ளமும் வருகிறது என்பதை அறிவீர்!



மறக்குலப் பெருமை சொல்லும் மாகாவியம்!

மனங்கவர் ஓவியம்!

உலகம் பல விடுதலை மறவர்களைக் கண்டிருக்கிறது. இதம்தரு மனைநீங்கி இடர்மிகு சிறைப்பட்டுத் தம் இன்னுயிர் ஈந்த தியாகிகளைக் கண்டிருக்கிருேம்!

"வேலுக்குவேல்! வாளுக்குவாள்!" என நேருக்குநேர் நின்றங்கு போரிட்டோர்—நீங்காப் புகழினை அணைத்துக்கொண்டோர் பன்னூறு பேர்!

சோகச் சூருவளிகள் வாட்டி வதைத்து வாரி எறியினும் ஏற்ற கொள்கைக்காக எதிரி விடுகணையையும் தாங்கிக்கொண்டோர் பல்லாயிரம்!

வீர முத்திரை குத்திக்கொண்ட இத்துணைப் பேரையும் சந்தித்த உலகின் நிகழ்ச்சிகளில் தமிழக விண்மீன்களும் ஒளிரச் செய்கின்றனர்.

வெள்ளையன் ஆதிக்கம் வலுத்தஞான்று ஈண்டு அரசோச்சிய மன்னர்கள் பலர் நம் நினைவைவிட்டு நீங்கார். முடிசார்ந்த மன்னராயினும் முடிவிலொரு பிடி சாம்பலாய்த்தான் போவர் என்பது நமக்கும் தெரியும். ஆனுல் முடியாப் புகழை நிலைநிறுத்திவிட்டு வாழ்க்கையின் முடிவைச் சந்தித்தவர்கள் சிலர் தான். அவர்களுள் சிவகெங்கைச் சீமையை ஆண்ட மறக்குல மன்னர்கள் ஆன மருதிருவர் குறிப்பிடத்தக்கோர் ஆவர்.

அவர்கள் வாழ்வு முதலில் அமைதியான நீரோடையாய்த்தான் இருந்தது. தமிழின் இனிமையைச் சுவைத்தும், தம் குலத்தின் நலனைப் புரந்தும் வாழ்ந்த அன்னுரின் திறம் கேட்டு ஆங்கிலேயரும் அஞ்சினர். நட்புரிமை கொண்டாடினர். பின்னர் ஏற்பட்ட புரட்சிச் சிதறல்கள் ஆங்கிலேயரின் விழிகளைக் குத்தின.

"அடுத்த வீட்டில் பற்றிய கொள்ளியை அணைக்காவிட்டால் தம் வீடும் பற்றி எரிய அதிக நேரம் ஆகாது!" என்பதை உணர்ந்த மருதரசர், பாஞ்சையில் மூண்ட பகைத்தீயை அணைக்க முயன்ருர். அதுவே ஆங்கிலேயர்களின் பகையை வளர்ப்பதும் ஆயிற்று. அதன் விளைவைச் சந்தித்த சிவகெங்கைச் சீமை வடித்த கண்ணீரும், உகுத்த செந்நீரும் கொஞ்சமல்ல! அவை சொல்லும் மறக்குலக் காவியம்தான் "சிவகெங்கைச் சீமை"யாக—செந்தேன் மணக்கும் சித்திரக் கூடமாக உருவெடுக்கின்றது!

தமிழரின் பெருமைக்குரிய வரலாற்று நிகழ்ச்சிகளாம் இதை, தொகுத்தெடுத்து உங்கள் சிந்தனைக்கு வைக்கின்றனர் **கண்ணதாசன் புரடக்ஷன்சார்.**

விருந்து விரைவில் படைக்கப்படவிருக்கிறது. சுவைப்பதும் பயன் பெறுவதும் உங்கள் பங்கு.



அரசியலில் துடிப்பென்பது லாபத்தையும் தரும்; இழப்பையும் தரும். சின்னமருது சிவகெங்கை மண்ணின் முறுகேறிய காளை. உணர்ச்சியும் துடிப்பும் உடன்பிறந்தவை, அவருக்கு. வேலும் வாளும் வீசி வந்தோர் மனம் எப்போதும் துள்ளிக்கொண்டே இருக்கும் என்பதற்கு இவர் வாழ்வு ஒரு சான்று. பெரியமருதரசர் "ஊமைத்துரைக்கு உதவலாமா? வேண்டாமா?" என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுதிலேயே, சின்னமருது தன்னுலானதை எல்லாம் செய்கிருர் ஒருபுறம். சிவகெங்கைச் சீமையின் வாழ்விலும் தாழ்விலும் இவர்க்குச் சம பங்குண்டு!

பெண்களின் பங்கு சுதந்தரப் போராட்டக் காலங்களில் தான் பெரிதும் தெரிகிறது. கிளர்ந்தெழுகின்ற உரிமைக் கனலில் பெண்டிரும் தியாக நெய்யைச் சொரிந்துவிட்டால், அதை எவரும் அணைக்கமுடியாது. ராணி ராக்காத்தாள் சிவகெங்கைச் சீமைச் சரித்திரத்தில் நீங்காத ஓரிடத்தைப் பெற்றுவிட்டவர். கணவர் மருதரசரின் செயல்கள் யாவினும் கைகொடுத்து, சீமையின் வாழ்விற்காகத் தன் வாழ்வையும் ஒடுக்கிக்கொண்டவர், இவர். மறக்கமுடியாத சரித்திரச் சுவடுகளில் பெரிய ராணி ராக்காத்தாள் சென்ற பாதையும் ஒன்று.

ஆச்சாரியாருக்கு அன்பழைப்பு!

உயர்திரு
ஆச்சாரியார்,
அவர்கள்
பசுல்லா ரோடு
சென்னை.17.

உயர்திரு. ஆச்சாரியார் அவர்களுக்கு வணக்கம்.

தங்களுக்கு மடல் தீட்ட வாய்ப்புக் கிடைத்தமைக்குப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். அரசியலில் பங்கு கொள்ள ஆரம்பித்த இளமைக் காலத்திலிருந்து, ஏறக்குறைய 59 ஆண்டுகளுக்குமேல் தமிழ் நாட்டிற்குத் தாங்கள் ஆற்றியிருக்கும் தொண்டு சரித்திரத்தில் இடம் பெறக் கூடியதாகும்.

ஆந்திரா பிரிகின்றபொழுது **சென்னை மனதே** என்று தமிழ் நாட்டின் தலைநகரத்தை ஆந்திராவோடு சேர்த்து இணைத்துக்கொள்ள விரும்பி ஆயிரம் காரணங்களைக் காட்டி வாதாடிய ஆந்திரர்களிடமிருந்து சென்னையைக் காப்பாற்றிய பெருமை தங்களையே சாரும்.

பாகிஸ்தான் பிரிவினையை பண்டித நேரு முதல் சாதாரணக் காங்கிரஸ் காரர்கள்வரை; ஏன் முஸ்லீம்களில் சிலரும்– 'இது பகற்கனவு. இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் ஒருபோதும் பிரியாது. பாரத மாதாவின் அங்கங்களைத் துண்டுபோடச் சம்மதியோம்'' என்று கூட்டாகக் குரல் எழுப்பிய போது, தாங்கள் மட்டும் தனித்து நின்று–''பாகிஸ்தான் பிரிந்தே தீரும். பாரத மாதாவின் அங்கங்களில் ஒன்று துண்டிக்கப்பட்டு தனித்து விழும் அங்கு தனிக்கொடி பறக்கும். பாகிஸ்தானில் பிறைக்கொடி பறக்கப்போவதை உங்கள் கண்களாலேயே பார்க்கப்போகிறீர்கள்'' என்று உறுதி கூறி – எதிர்த்தவர்கள் வாழ்த்துக்கூற, கண்டனம் தெரிவித்தவர்களின் கண்களில் ஒளி சிந்த, **பிரிந்தே விட்டதா** என்று சிலர் வாய்பிளந்து நிற்க பாகிஸ்தான் பிரிவினையைச் செய்து காட்டினீர்கள்.

புதிதாக ஒரு பிரச்னை அகில உலகத்தில் எழுந்தாலும் சரி, இந்தியத் துணைக்கண்டத்தில் எழுந்தாலும் சரி, தமிழ்நாட்டில் ஏற்பட்டாலும் சரி இதில் ராஜாஜியின் கருத்து என்ன என்று எதிர்பார்க்குமளவுக்கு தலைவர்களின் கவனத்தையும், மக்களின் கவனத்தையும் தங்கள் பால் ஈர்த்து வைத்துள்ளீர்கள்.

தமிழ்நாட்டு அரசியலிலும், அந்த அரசியலால் சூழப்பட்டிருக்கிற மக்களின் வாழ்விலும், வளத்திலும் எப்பொழுதும் தங்களுக்கு மிகுந்த அக்கறையுண்டு. அப்படி அக்கறை இருப்பதால்தான் ஆளும் கட்சியின் தவருன போக்கைக் கண்டிக்கவும், நல்லபல யோசனைகளைக் கூறி அதை ஜனநாயகப் பாதையில் இழுத்துச் செல்லவும் ஒரு வலுவான எதிர்க்கட்சி – பேரியக்கம் தேவை என்று தங்கள் உள்ளக் குமுறலை எண்ணத்தின் வாயிலாகக் கொட்டியிருக்கிறீர்கள் சென்ற கிழமை கல்கி இதழில்.

ஆளும் கட்சி, தன் கட்சி வளர்ச்சி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, ஜனநாயகத்திற்குப் புறம்பாகத் தவருன வழியில் செல்லும் பொழுதும்—காரியமாற்றும் பொழுதும் அதை எதிர்த்தும், தடுத்தும் நிறுத்தி, ஆளும் கட்சியை நேரான வழிக்கு இழுத்துச் செல்ல ஒரு பேரியக்கம் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல எந்த நாட்டுக்கும் தேவைதான். ஆனுல் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஆளும் கட்சிக்குப் பலமான எதிர்க்கட்சியாக அமையக் கூடிய, வலுவான ஒரு பேரியக்கம் இப்பொழுது இல்லை என்பது போலவும், இனிமேல்தான் புதிதாகத் தோன்ற வேண்டும் என்கின்ற அளவிலும் தங்கள் கட்டுரையின் கண்ணேட்டம்அமைந்திருப்பதுதான் வியப்புக்குரியதாகும்.

தமிழ்நாட்டில் இனிப் புதிதாக ஒரு இயக்கம் அரும்பி, அது தன்னுடைய திட்டங்களையும், கொள்கைகளையும், கோட்பாடுகளையும் மக்கள் மத்தியில் வைத்து, அதை மக்கள் அலசி, ஆராய்ந்து, இதயப் பூர்வமாக ஏற்றுக்கொண்ட பிறகு, அந்த இயக்கம், மக்கள் இயக்கமாக–பேரியக்கமாக வளர்ந்து, ஆளும் கட்சிக்குப் பலமான எதிர்க்கட்சியாக அமைந்துவிடமுடியுமா? அப்படி ஒரு சூழ்நிலை நிச்சயமாக இல்லை!

ஏதோ ஒரு கொள்கையின் அடிப்படையில் இப்பொழுது புதிதாக ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருவதாகக் கூறப்படுகிற ஒரு தமிழர் இயக்கம், தமிழ்நாட்டில் எந்த அளவு செல்வாக்குப் பெற்றுள்ளது? அதன் கொள்கைகளை மக்கள் புரிந்து கொண்டு வரவேற்கிருர்களா? என்பதைக் கவனித்துப் பார்க்கும் பொழுது, தமிழகத்தைப் பொறுத்தவரை இனி ஒரு புதிய இயக்கம் தனியாக எந்தக் கொள்கையைச் சொல்லிக்கொண்டும் மக்கள் மத்தியில் வந்து வளர்ச்சியடைந்துவிட முடியாது என்பதற்கு **நாம் தமிழர் இயக்கம்** நல்ல சான்ருகும்.

தமிழகத்து மக்களிடம் அதிகம் ஈடுபாடு கொண்ட பேரியக்கமாகவும், ஆளும் கட்சிக்கு வலுவான எதிர்க்கட்சியாகவும் இயங்கக்கூடிய அளவில் உள்ள கட்சி **தி. மு. கழகம் ஒன்றுதான்** என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

வேறெந்தக் கட்சியும் தி. மு. கழகத்தோடு சமமாக வளரவோ – மக்களின் ஆதரவைப் பெறவோ இல்லை என்பதை கடந்த பொதுத் தேர்தலும், நடந்து முடிந்த நகர சபைத் தேர்தலும் விளக்கிக் காட்டியிருக்கிறது.

எதிர்க்கட்சியாக இயங்குவதற்குரிய சகல கல்யாண குணங்களும் தங்களுக்கே இருப்பதாகக் கூறிக் கொள்ளும் கம்யூனிஸ்ட்க் கட்சி, தமிழகத்தைப் பொறுத்தவரை, பூச்சி விழுந்த கீரைப் பாத்தியைப்போல் நாளுக்குநாள் நறுங்கிக்கொண்டு வருவதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள்.

திராவிடக் கழகத்தைப்பற்றியும் அதன் இன்றைய நிலைபற்றியும் தங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை.

அடுத்து தமிழரசுக் கழகம்–அதற்கும் மக்களுக்கும் எந்தவிதமான ஈடுபாடும் இல்லை. தொழு நோய்க்காரனைத் தூர வைத்தேபழகுவதைப் போல், தமிழரசுக் கழகத்தை மக்கள் ஒதுக்கி வைத்தே வேடிக்கை பார்க்கிருர்கள். சிறுபான்மையினரின் ஆதரவுகூட இல்லாமல் திரிசங்கு நிலையில் அல்லாடுகிறது தமிழரசுக் கழகம்.

சோஷலிஸ்ட், பிரஜா சோஷலிஸ்ட் போன்ற மற்ற அகில இந்தியக் கட்சிகள், மக்களுக்கு அறிமுகமே இல்லாதவர்கள். நடக்கமுடியாத நோயாளிக் குழந்தை நடை வண்டியைப் பிடித்துக்கொண்டு தள்ளாடுவதைப்போல் அகில இந்தியக் கட்சியின் அடையாளச் சின்னங்களாக தவழ்ந்துகொண்டிருக்கிருர்கள்.

நாட்டிற்காகவும், மொழிக்காகவும், இனத்திற்காகவும், பண்பாட்டிற்காகவும், தென்னுட்டின் பொருளாதார வளத்திற்காகவும், திராவிட மக்களின் வாழ்வு உயர்விற்காகவும் உறுதியான கொள்கையோடு பணியாற்றி வரும் இயக்கம் தி. மு. கழகம் ஒன்றுதான் என்பதை நாடு அறியும் நீங்களும் அறிவீர்கள்.

தி. மு கழகத்தின் வலிமைபற்றி தங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. காரணம் அதன் ஆரம்ப காலச் சரித்திரத்தின் ஏடுகளில் தியாகத் தழும்பு தென்படுவதற்கு மூலவராக எதிர் முனையிலே நின்று போர் தொடுத்தவர் தாங்கள். இந்தி மொழி தென்னுட்டை அடிமை கொள்ள வருகிறது. கடுமையாக எதிர்த்து விரட்டாவிடில் ஏமாளிகளாகிவிடுவோம். எதிர்காலம் இருளடைந்துவிடும் வருங் கால சந்ததிகளின் வாழ்க்கை சூன்யமாகிவிடும் என்று இந்தியை எதிர்த்து போர்க் குரலெழுப்பும் வரிசையில் இன்று முன்னேடியாகத் திகழும் தாங்கள் 1938-ல் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபொழுது இந்தியை ஆட்சி மொழியாக்கிவிட அரும்பாடுபட்டீர்கள். அப்பொழுது அதைத் தீவிரமாக எதிர்த்து தாளமுத்து–நடராசன் என்ற இரண்டு இளம் உயிர்களைப் பலிகொடுத்து தங்களால் தமிழகத்திற்கு ஏற்பட இருந்த பெருந்தீமையை வரவிடாமல் போராடிவாகைசூடியது தி.மு.கழகம்.

அடுத்துத் தங்களால் கொண்டு வரப்பட்ட **குலதர்மக் கல்வித் திட்டத்தை** எதிர்த்தும், அதே சமயத்தில் **கல்லக்குடிப் போராட்டத்தையும், ரயில் நிறுத்தப் போராட்டத்தையும்** மும் முனைகளில் நின்று எதிர்த்தும், ஒரே சமயத்தில் மூன்று தன்மானப் போராட்டங்களை நடத்தி வெற்றி பெற்று, தி. மு. கழகம் பலம் வாய்ந்த பெரும் கட்சி என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளது. போராட்ட காலத்தில் தி. மு. கழகத்தின் அபரிமிதமான வெற்றியைக் கண்ட தாங்கள் வானெலியில் பேசும் பொழுது உணர்ச்சி வசப்பட்டு தி. மு. கழகத்தின் **கணக்கைத் தீர்த்துக் கட்டிவிடுவேன்** என்று கர்ஜித்தீர்கள். ஆனுல் கணக்கு எப்படித் தீர்ந்தது என்பது வேறு பிரச்னை! இன்று தி. மு. கழகம் தங்கள் கணக்கையும் தவருக்கி–கழகம் போட்ட கணக்குக்கு மேலேயும் வளர்ந்து சென்னை நகர சபையைக் கைப்பற்றி இருக்கிறதென்ருல் இதைவிட வேறு ஒரு பலமான எதிர்க்கட்சி இனி உருவாகமுடியுமா–அவசியமா என்பதை எண்ணிப் பாருங்கள்.

லட்சியத்தை மறந்து வெகு தூரம் போய்விட்ட ஆட்சியாளரை, நேரான வழிக்குக்கொண்டு வர ஒரு பேரியக்கமும், சமுதாயத்தைத் திருத்தி, ஏற்றத்தாழ்வுகளை ஒழித்து, யாராக இருந்தாலும் உழைத்துப் பாடுபட வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்க ஒரு பேரியக்கமும் தேவை என்கிறீர்கள். இப்படி ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒவவொரு இயக்கம் ஏற்படுவதைவிட, சமுதாயம், பொருளாதாரம், அரசியல் இத்தனை துறைகளுக்கும் தேவையான திட்டங்களை தன்னகத்தே வைத்திருக்கும் தி. மு. கழகத்தை விடுத்து வேருெரு புதிய இயக்கம் தேவை என்பதின் பொருள் விளங்கவில்லை!

தாங்கள் ஒருமுறை ராயப்பேட்டையிலுள்ள **லட்சுமிபுரம்** பொதுக் கூட்டத்தில் பேசும்பொழுது **"இந்தியைத் தென்னுட்டின்மீது வலுக்கட்டாயமாகப் புகுத்த முனைந்தால் நாட்டுப் பிரிவினை கோரும் கட்சிக்கு ஆதரவு அதிகமாகலாம். நானே அதற்குத் தலைமை தாங்கும் காலம் வந்தாலும் வரலாம்''** என்று பலத்த கையொலிகளுக்கிடையே குறிப்பிட்டீர்கள். பொதுத் தேர்தல் சமயத்தில் **திராவிடத்தைக் காப்போம் என்று கல்கி இதழில் தலையங்கம் தீட்டினீர்கள்** இன்று நீங்களே ஒரு புதிய பேரியக்கம் தேவை என்றதும் காமராஜர்கூட தங்கள் குரலை வரவேற்கும் பாணியில் ''ஆமாம் ஆமாம். இப்பொழுது சரியான எதிர்க்கட்சியே இல்லை. இனி ஒரு புதிய எதிர்க்கட்சியை

★ தினகரன் ★

உண்டாக்கவேண்டியதுதான்'' என்று தன் அரசியல் சாணக்கியத் தந்திரத்தைக் காட்டிப் பேசியிருக்கிருர். காமராஜருக்கு மெய்யாகவே ஒரு நல்ல எதிர்க்கட்சி தேவை என்பதில் ஆர்வமில்லை. அவருக்கு இருப்பதெல்லாம் இப்பொழுது கஷ்டப்படாமல் கட்சியை வளர்க்க முடியவில்லையே என்ற கவலை. தி. மு. கழகத்தின் வளர்ச்சி காங்கிரஸை பாதிக்கிறதே என்ற அச்சம். இந்த நிலை நீடித்தால் தனக்கு டெல்லித் தலைமைப்பீடத்திலிருக்கும் செல்வாக்குக் குறைந்துவிடுமே என்ற பயம். அதுதான் தி. மு. கழகத்தின் பலத்தைக் குறைக்க சந்தர்ப்பத்தைத் தேடிக் கொண்டு அலைகிருர். தங்கள் குரலையும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆமாம் சாமி போடுகிருர்.

தி. மு. கழகம் ஒன்றரை லட்சம் உறுப்பினர்களையும், பல்லாயிரக் கணக்கான கிளைக் கழகங்களையும் கொண்ட பேரியக்கம். இதுதான் மாட்டுக்குமூக்கணாங்கயிறைப்போல், வீட்டுக்கொரு கதவைப்போல், ஆற்றுக்கொரு கரையைப்போல் ஆளும் கட்சிக்கு பலமான எதிர்க் கட்சியாக விளங்கமுடியும். இந்த எண்ணத்தை நீங்களும் ஒப்புக் கொள்வீர்கள். புதிய இயக்கம் தேவை என்ற முடிவையும் மாற்றிக் கொள்வீர்கள் என்ற நினைப்பில்தான் இந்த அஞ்சலை எழுதத் துவங்கினேன். முடிந்தவரை உங்கள்ஒத்துழைப்பை தந்து இந்த அன்பழைப்பை ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகிறேன்.

இப்படிக்கு
பேரியக்கத் தொண்டன்

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
• குழந்தைகளுக்குச் சிறந்த ஆகாரம்
திண்டுக்கல்ரோடு, மதுரை.

பீடித் தொழிலாளர் தூதுக்குழு தொழில் அமைச்சரைக் கண்டது.

தென்றல் 4-4-'59 இதழில் நெல்லை மாவட்டப் பீடித் தொழிலாளர் நிலை விளக்கப்பட்டுள்ளது; தோழர்கள் அறிவர். அக்குறைகளை அரசினரிடம் எடுத்துக் கூறி மாற்றம் காண, நெல்லை மாவட்ட பீடித் தொழிலாளர் தூதுக்குழு ஒன்று, மாநிலத் தொழில்துறை அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களை 8-4-'59 அன்று பேட்டி கண்டது. தூதுக்குழுவில் கழக எம் எல். ஏ. ஆன பேராசிரியர் க. அன்பழகன் எம். ஏ. அவர்களும், நெல்லை மாவட்டப் பீடித் தொழிலாளர் முன்னேற்ற சங்கத் தலைவர் ஆலடி அருணா பி. ஏ. அவர்களும் பங்கு கொண்டிருந்தனர். கோரிக்கைகள் எட்டையும் செவிமடுத்த அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். அமைச்சர் அவர்களின் பணியால் பீடித் தொழிலாளர் வாழ்வில் திருப்பம் ஏற்படும் என்று தூதுக்குழுவினர் நம்புகின்றனர்.

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

சீன பக்தியையும் அடிமைப்புத்தியையும் உறுதிப்படுத்திக்கொண்டுள்ளது. திபேத் விவகாரம் சீன நாட்டின் உள் விவகாரமாம். எவருக்கும் எந்த வகையான கருத்துரைக்கும் உரிமை கிடையாதாம்! சூயஸ் கால்வாய்த் தகராறு எகிப்தின் சொந்தப் பிரச்னையென்று இந்தக் கம்யூனிஸ்ட்கள் சுருதி இறங்கிப் பேசவில்லை! அல்ஜீரிய விவகாரம் பிரெஞ்சு நாட்டின் உள் விவகாரம் என்று ஒதுக்கி விடப்படவில்லை! ரோசன்பர்க் தம்பதிகள் கொலை செய்யப்பட்டது அமெரிக்க நாட்டின் உள் விவகாரம் என்று எண்ணித் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் சென்னையிலிருந்த அமெரிக்கத் தூதர் அலுவலகத்துக் கண்ணாடிகளை உடைத்திருக்கக்கூடாது! அமெரிக்கா-பாகிஸ்தான் ராணுவ ஒப்பந்தம் அந்நாடுகளின் சொந்த விவகாரம் தான் - கம்யூனிஸ்ட்களின் ஆர்ப்பாட்டம் ஏன்? திபேத் சீனாவின் உள்நாட்டு விவகாரமென்றால் "காம்ரேட்" தோழர்களின் கடந்த காலச் செயல்களுக்குச் சரியான விளக்கம் தர இயலுமா?

இந்தியக் காம்ரேடுகள் இக்கட்டான நிலைமையில் மாட்டிக்கொண்டு திரு திருவென்று விழிக்கிறார்கள்! இந்திய சர்க்காரின் வெளிநாட்டுக் கொள்கையை நேற்றுவரை வரவேற்றுப் பாராட்டியவர்கள், திபேத் செய்தி வந்தவுடன் நேரு அறிக்கையைத் தவறு என்கிறார்கள்! ஐயாயிரம் ரூபாய் வீரன் டாங்கேக்கு பொறுமை குறைகிறது. சீனத்தைப்பற்றி இங்கே விவாதிக்கக்கூடாது. மாஸ்டர் தாரா சிங் கைது செய்யப்பட்டதை சீன சர்க்கார் விவாதித்தால் நாம் ஒப்புக் கொள்வோமா என்று ஒரு மிகப் பெரிய உதாரணத்தைச் சொல்லியுள்ளார்! தலையாட்டும் கம்யூனிஸ்ட்களுக்கு நினைவூட்டுவோம். பீகிங் நகரத்துப் பார்லிமெண்டில், (சீனத்து ஏஜண்டுகளாக டாங்கேயும் மற்றவர்களும் இங்கே இருப்பதுபோல) இந்திய ஏஜண்டு 'Most Obedient Servants' யாராவது இருந்தால்- மாசேதுங் சர்க்கார் இருக்க அனுமதித்தால் தட்டிக் கேட்டிருப்பான்! அசோக் மேத்தா, மசானி, கிருபாளினி ஆகியோர் இந்தியக் கம்யூனிஸ்ட்களின் முறை தவறிய சீன ஆலிங்கனத்தைக் கண்டித்துப் பேசினார்கள். அவர்களுக்குச் சமாதானமும் சரியான பதிலும் கொடுக்க முடியாத ஹிரேன் முகர்ஜி, கிருபாளினியை மிக மிக மட்டமான நடைமொழியில் "இந்த ஆசாமி கம்யூனிஸ்ட்களைப் பற்றி இப்படிப் பேசலாமா?" என்று ஆத்திரப்பட்டுக் கேட்கிறார்!

"1942-ல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் இந்தியா முழுவதும் விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்கையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சோவியத் யூனியன் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக வெள்ளையரின் போர் நடவடிக்கைகளை ஆதரித்து நின்ற மகத்தான தவறைச் செய்தது. அதற்குப் பின் செய்யும் மிக மகத்தான அரசியல் தவறாகும் திபேத் பற்றி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி விடுத்த அதிகாரப் பூர்வ அறிக்கை. சீனா கூறும் புகார்களை அப்படியே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நம்புவதானது அக்கட்சி, பிரதமர் நேருவை மதிக்காமல் இந்த நாட்டுக்கு விசுவாசமுள்ளதா என்பதையும் சந்தேகிக்கச் செய்கிறது. நெருக்கடியான காலத்தில், திட்ட வட்டமான ஒரு முடிவு செய்யப்பட வேண்டிய காலத்தில்; அக்கட்சி இந்திய சர்க்காருடன் சேர்ந்துழைக்குமா அல்லது சீனக் கம்யூனிஸ்ட்களைத்தான் ஆதரிக்குமா? என்ற கேள்விதான் இன்று லாபி வட்டாரத்தில் தாராளமாகக் கேட்கப்படுவதாகும்." ஏப்ரல் முதல் தேதி நடந்த புதுடில்லிச் செய்தியாக 2-4 59 'தினமணி' யில் தரப்பட்டுள்ள இந்தக் குறிப்பு கம்யூனிஸ்ட்களின் அறிக்கை எத்தகைய கீழ்த்தரப் போக்குடன் அமைந்துள்ளதென்பதையே நன்கு அறிமுகப்படுத்துகின்றது! தமிழ் நாட்டிலேயிருக்கின்ற அற்புதக் கம்யூனிஸ்ட்கள்-இலக்கியக் கண்ணோட்டங்கள் பதில் கூறுமா?

இந்தியக் கம்யூனிஸ்ட்கள் இந்திய சர்க்காரின் கொள்கைக்குப் புறம்பாக பீகிங் தலைவர்களுக்குத் தாளம் தட்ட அனுபவப் பூர்வமான ஆதாரங்களைக் காட்டியுள்ளனரா என்றால் இல்லை! நவ சீனத்து செய்தி நிலையம் சொல்பவற்றையெல்லாம் அப்படியே அள்ளி விழுங்கி 'ஜனசக்தி' இதழில் வாந்தியெடுப்பது தான் வழக்கமாகும்! சீனத்துக் கொடுமைகளை - கட்டாய அடக்கு முறையைக் கண்டித்ததால், கலங்கித் தவித்துக் கண்ணீர் வடித்தோர் பௌத்த மதப் பிட்சுகள் - பாமர மக்கள்-படை பலமும் பயிற்சியுமில்லாதவர்கள்! ஆனால் கம்யூனிஸ்ட் செயற்குழு கூறுவது இது: "திபேத் சம்பவம் ஏகாதிபத்திய உதவியுடன் பிற்போக்காளர் கலகம் எனக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது இந்த ஏகாதிபத்திய சதியை நமது அண்டை நாடான சீனா வெற்றிகரமாக தகர்த்து விட்டதுபற்றி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மகிழ்ச்சி அடைகிறது" நூற்றுக்கு நூறு நன்றி விசுவாசம் படைத்தவர்கள்தான் கொலை வெறிச் செயல்களை மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள்-உலகத்தின் வேறு எந்தப் பகுதியிலும் நடைபெறாத நெஞ்சறிந்த துரோகச் செயல் இங்கே நடைபெற்றுள்ளது "திபேத்தில் உயிர்ச் சேதமும் சொத்து நாசமும் ஏற்பட்டது பற்றி வருத்தமும் அனுதாபமும் தெரிவித்துக்கொள்வதுடன், மிகக் கஷ்டமான நிலைமையைச் சமாளிக்க வேண்டியிருக்கும் சீனாவிடமும் இந்தியர் அனுதாபம் காட்டுவரென்றும்" இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. சீனாவின் எடுபிடிகளாக இருக்கும் கம்யூனிஸ்ட்கள் தங்களுடைய மகிழ்ச்சிப் பெருக்கில் இந்தியர்களையே பீகிங் சீமான்களுக்கு அடகு வைத்து விடுவார்களாம்! ஊமைகளாக இருக்க முடியாவிட்டால் இப்படியா உலகத்தவர் முன்னே உளறிக் கொட்டுவது? தரக்குறைவைக் காட்டுவது? கம்யூனிஸ்ட் மூளை பி. ஸி ஜோஷி அமெரிக்கத் தூண்டுதலினால்தான் திபேத்தில் கொந்தளிப்பு என்கிறார்! உரைகல் வீரன் ரெ. ரெங்கசாமி "நாகர் கலகம்பற்றி சீனா பேசாதபோது, இந்தியா திபேத் பற்றி பேசக்கூடாது. பேசுவது பெரிய சதிக்கு இடம் கொடுத்ததாகும்" என்கிறார்! ஆசிரியப் பேரறிஞர் ஜீவானந்தம் அவர்களோ பார்லிமெண்டில் திபேத்பற்றி விவாதித்தால் விளைவுகள் விபரீதமாக அமைந்து விடும் என்கிறார், சீனா இந்தியாவைத் தூக்கி விழுங்கிவிடுமென விசனப்படுகிறார் போலும்! விழுங்கினால்கூட வரவேற்பவர்கள் கம்யூனிஸ்ட்களாகத் தானே இருக்கமுடியும்? பிரதமர் நேரு திட்டமாகப் பேசவில்லையாம். கம்யூனிஸ்ட்களைப்போல மாசேதுங் முன்னிலையில் மண்டியிட்டு தாசானுதாசர்கள் என்ற தாழ்ந்த நிலையில் எல்லோரும் இருக்க வேண்டும் என்பது எவ்வளவு மட்டரகமான செயல் என்பதை "இண்டெஸ்கி" (இந்திய)த் தோழர்கள் உணர வேண்டுமே?

தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட் பத்திரிகை சீனச் செய்தி நிலையம் தந்த தலாய்லாமாவின் கடிதங்களைக் காட்டி தன்னுடைய தவறுகளைச் சரியெனச் சாதிக்கத் துடிக்கிறது. சதி வேலைக்கேந்திரங்களை எடுத்துக் காட்டி அனுதாபத்தைக் கேட்கிறது. ஆசிய ஒற்றுமையைச் சீர்குலைக்கும் சதிகள் நடைபெறுவதாக அலறுகிறது! உண்மையைச் சொன்னால் ஆத்திரமேன் என்று ஆயாசப்படுகிறது! மீண்டும் திபேத் விவகாரமா என்று விம்முகிறது; விழியிலே நீர் வழியக் கதறுகிறது! இத்தனையும் சொன்னாலும் இந்தியக் கம்யூனிஸ்ட்கள் சீன ஏஜண்டுகள் என்பதை எவரும் மறந்துவிடமாட்டார்கள்! கிருபாளினியின் சொல்லடி தாங்க முடியாமல் ஹிரேன்முகர்ஜி சீறிவிழ, திருமதி ரேணுகா தவிக்க, மற்றக் கம்யூனிஸ்ட்கள் கூச்சல் போட்டுக் குழப்பம் செய்யக் காரணமாக இருந்தது, கம்யூனிஸ்ட் கட்சியின் அவசர அறிக்கை! சதிக்கூடாரம் எனக் கம்யூனிஸ்ட்கள் சொல்லும் 'காளிம்பாங்' நகரத்தைச் சீனக் கம்யூனிஸ்ட்கள் தாக்கினால் அஜய்கோஷும் அவருடைய கட்சித் தோழர்களும் செய்யப் போவதென்ன? ஜனசக்திப் பத்திரிகையும் தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்ட்களும் சொல்லப் போகும் பதில் என்ன? கம்யூனிஸ்ட்கள் அந்நிய நாட்டு ஏஜண்டுகள் இல்லையென்றால் சீனத்துச் சிங்கார மொழிகளைமட்டும் நம்பாமல் சிந்தனைச்செயல் முறை உண்டா? தலாய்லாமா கலகக்காரரிடம் பிடிபட்டு விட்டதாகக் கூறப்பட்டது. ஆனால் இப்போது அவர் இந்தியாவைப் புகலிடமாக்கிக்கொண்டு, சீனப் படையினரின் காவலுக்கும், கடுமையின் முயற்சிக்கும் தப்பிப் பிழைத்து தஞ்சம் புகுந்துவிட்டார்! இந்திய சர்க்கார் எல்லா வகையான உதவிகளையும் ஆதரவுகளையும் வரவேற்புகளையும் தலாய்லாமாவுக்குத் தந்துவிட்டது! இதைப்பற்றிய அபிப்பிராயம் கூற மறுத்துவிட்டார், கல்கத்தா சென்ற அஜய்குமார் கோஷ்! பீகிங் ரேடியோ நேரு சர்க்காரைப்பற்றி எத்தகைய குறைமொழிகளைச் சொன்னாலும் உலகத்துப் பெரும் பகுதியினர் தலாய்லாமாவுக்கு தஞ்சமளித்ததை வரவேற்றுள்ளனர்; இந்தச் சமயத்தில் மாஸ்கோ மாளிகையின் மாவீரன் குருஷ்சேவ் நேருவை ரஷ்யாவுக்கு மீண்டும் வரும்படி அழைத்திருக்கிறார். அரசியல் அறிவுரைகள் வழங்குவதற்காகப்போலும். பெற்றுக்கொள்ளவும் கூடும். திபேத், கம்யூனிச நாடுகளுக்கு இணைப்பாக இருக்கும். இந்தியாவை இரண்டாகப் பிளந்துவிடுமோ என்ற அச்சம் வந்துவிட்டதுபோலும்! இல்லையேல் இந்த அனாவசியமான அவசர அன்பழைப்பு ஏன்? இந்தியக் கம்யூனிஸ்ட்கள் தங்கள் நிலையையும் நினைப்பையும் சரி செய்துகொண்டு நவ சீனாவின் நற்செயல்கள் உண்டெனின் அவைகளைப் பாராட்டி, அதே சமயத்தில் அந்த நவசீனா நடத்துவிக்கும் நாச வேலைகளையும் கண்டிக்கத் தவறக் கூடாது! ★

தலைமைக்கழக அறிக்கை: 6/59

உதகையில் சட்டமன்றம் கூட்டுவதற்குக் கண்டனம்

20-4-59 முதல் 26-4-59 வரை கண்டன வாரம்

பொதுச்செயலாளர் அறிக்கை.

பொதுமக்களின் விருப்பத்திற்கு மாருகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோரிக்கைக்குச் செவி சாய்க்காமலும், திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்றக் கட்சியின் வேண்டுகோளைப் புறக்கணித்தும், சென்னை அரசியலார், சட்டமன்றக் கூட்டத்தை 20-4-'59 முதல் பத்து நாட்கள் உதகமண்டலத்தில் கூட்டுவது என்று முடிவு செய்துவிட்டார்கள்.

இந்தச் செயல், காங்கிரசு ஆட்சியினரின் வெற்று ஆடம்பரத்திற்கும், அரசாங்கத்தின் வீண் செலவிற்கும், பொதுமக்கள்—அலுவலாளர்—செய்தித்தாளினர் ஆகியோரின் பெருந் தொல்லைகளுக்கும் வழிசெய்வதாக இருக்கிறதேயல்லாமல், எந்த உருவான பலனையும் பயப்பதாக இல்லை.

இந்தச் செயல் கண்டனத்திற்குரியது என்பதைக் காட்டும் அறிகுறியாகத் தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்கள் உதகைக்குச் செல்ல மறுத்துக் கண்டனத்திற்கான காரணங்களைப் பொதுமக்களுக்கு விளக்கிக் காட்டவும், பொதுமக்களின் கண்டனத்தை ஆட்சியாளருக்குத் தெரியப்படுத்தவும் தத்தம் தொகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருக்கின்றனர்.

ஆங்காங்குள்ள கிளைக் கழகத் தோழர்கள் 1959 ஏப்ரல் திங்கள் 20-ம் நாளிலிருந்து 26-ம் நாள் வரையிலுள்ள ஒரு வார காலத்தைக் கண்டன வாரமாகக் கொண்டு, பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக், கண்டன ஊர்வலம் நடத்துதல்—பொதுக்கூட்டம் கூட்டுதல்—துண்டு அறிக்கைகள் வெளியிடுதல்—கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுதல் போன்ற ஏற்ற செயல்களைச் செய்து, கண்டன வாரத்தை வெற்றிகரமாக முடிக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

கூட்டங்களில் நிறைவேற்றப்படும் கண்டனத் தீர்மானத்தைச் சென்னை அரசியலாருக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம். கழகச் சட்டமன்ற உறுப்பினரல்லாத பிற சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துள்ள தொகுதிகளிலுள்ள கழகத் தோழர்கள், கூட்டங்களில் நிறைவேற்றப்படும் கண்டனத் தீர்மானத்தை அந்தந்தத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினருக்கும் அனுப்பி வைக்கக் கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்', சென்னை-13
13—4—1959

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

அவசர ஒட்டி

அண்மையில் தில்லி நாளிதழ் ஒன்று வெளியிட்ட சுவரொட்டியில் இவ்வாக்கியங்கள் இப்படி இருந்தன:

டலாய் லாமா வழக்கு ஒத்திவைக்கப் பட்டது.

டால்மியா எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை.

— 3-ம் பக்கத் தொடர்ச்சி —

1954-ல் தலைலாமாவும் பஞ்சன் லாமாவும் சீனவுக்கு அழைக்கப்பட்டனர். அங்கே சீன நெறி முறைகளும் பொதுவுடைமைக் கொள்கைகளும் போதிக்கப் பெற்றனர். பஞ்சன் லாமா அக்கறையோடு பாடத்தைக் கேட்டதுபோல், தலைலாமா கேட்கவில்லை. இருந்தாலும் நயத்தாலும் பயத்தாலும் காலத்தோடு ஒட்டித் தம்மிடம் வந்துவிடுவார் தலைலாமா என அன்னூர் தப்புக் கணக்குப் போட்டுவிட்டனர்.

இந்த நம்பிக்கையோடு தான் செல்லப் பிள்ளைகள் மாதிரி அவர்களை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தனர். இந்தியத் துணைக் கண்டத்திற்கு வந்து போனதிலிருந்து தலைலாமா மிக அதிகமாக வெளி உலகின் நடவடிக்கைகளை அறிய வாய்ப்புப் பெற்றார். அதிலிருந்து சீன ஆதிக்கத்தை முறித்துக் கொண்டு வெளியேறும் நாளை விரைந்து எதிர் நோக்கினார், அவர்.

1956-ல் கம்பாக்கள் சீன அரசுக்கெதிராக கொரில்லாப் போரைத் தொடங்கினர் ஆம்டோ, கோலுக், டெர்ஜீ முதலிய இடங்களிலிருந்து கிளர்ந்தெழுந்த கம்பாக்கள் சீனப் படைகளைச் சிதறடித்தனர், அதற்குப் பதிலாகத்தான் சீனர்கள் அக்கம்பாக்கள் கோடை காலத்தில் கூடியிருந்த போது சுட்டெரித்தனர், விமானம் மூலம்.

1957-ல் சீனர்கள் நிலைமையை நன்கு பரிசீலனை செய்தனர். பரவலாகவும் ஆழமாகவும் திபேத்தியர் தம் ஆதிக்கத்தை எதிர்ப்பதை உணர்ந்த சீனர், பாகு மொழிகளைச் சிந்தத் தொடங்கினர். "உங்களைக் கொடுமைப்படுத்துவதற்காகவா நாங்கள் இந்தச் சீர்திருத்தங்களைச் செய்கிறோம்? இப்புது முறைகள் உங்களுக்குப் பிடிக்காவிட்டால் பொறுத்திருக்கிறோம். **குறைந்தது ஆறு ஆண்டுகள் நாங்கள் எங்கள் வேலைத் திட்டங்களைத் தள்ளி வைக்கிறோம். பொறுத்துப் பொறுத்து எங்கள் ஏற்பாடுகளை மேற்கொள்கிறோம், நீங்கள் ஏற்றுக்கொண்டால்!"** என்று அவர்கள் கூறியும், சீனரின் நயவஞ்சகத்தை ஏற்கத் தயாராகவில்லை திபேத்தியர். லாசாபோன்ற இடத்திலிருந்தால் தொல்லை பல வரும் என்றறிந்த அவர்கள் வெளியேறத் தொடங்கினர். அதைக் கண்ட சீனர் லாசாவைவிட்டு வெளியேறும் ஆட்களைத் தடுக்கவும் சோதனை போடவும் தொடங்கினர். இப்படி நடைபெற்ற கொடுமைகள், ஏட்டில் எழுதி மாளாதன.

சீனக் கமிசார் அழைத்த நிபந்தனைகளுடன் கூடிய விருந்துக்கு தலைலாமா செல்லாததிலிருந்து எரிமலை உள்ளுக்குள் புகையத் தொடங்கியது. 19-3-59 அன்று நன்பகலில்-ஒரு மணிக்கு எரிமலை திடீரென வெடித்தது. பனிமலை மக்கள், சீனர்களைக் கண்ட கண்ட இடத்தில் தாக்கத் தொடங்கினர். சீனத் துப்பாக்கிப் படையுடன் சரிநிகர் சமமாகத் திபேத்தியர் போரிட்டனர். இந்த மக்களுக்கு எப்படி நவீனக் கருவிகள் கிடைத்தன? எங்கு அவற்றை இயக்கப் பயிற்சி பெற்றனர்? லாமாக்கள் தங்கள் மடங்களில் மறைத்து வைத்திருந்த கருவிகளை வழங்கினர் என்று எழுதுகின்றனர், சிலர். இதைச் சுட்டிக் காட்டித்தான் அன்னியர்கள் திபேத்துக்குத் தளவாடங்களைத் தந்துதவிக் கெடுத்துவிட்டனர் என்கிறது சீன அரசு. அன்னிய நாட்டினரிடம் இருந்து லாமாக்கள் கருவிகளை வாங்குகையில் சீன அரசு தூங்கிக் கொண்டிருந்ததா? அப்படிப் பிறரிடம் திபேத்தியர் கருவிகளைப் பெற்றிருப்பினும் அது தவறில்லை என்றே நான் கருதுகிறேன். மலாயாவில் பதுங்கி வாழும் பொதுவுடைமையர்க்குப் புதிய கருவிகள் கிடைப்பது எப்படி? மற்ற மற்ற இடங்களில் பொதுவுடைமையர் கலகம் செய்வதற்கென்றே தந்தையார் நாடுகளிடம் கருவிகளைப் பெறுகையில், திபேத்தியர் மட்டும் தம் உரிமைப்போருக்குக் கருவிகளைப் பெறுதல் எப்படித் தப்பாகும்? சீனவுக்கு இட்டுச் செல்லப்பட்ட திபேத்திய மக்களுக்கு சீனர்கள் படைப் பயிற்சி தந்து தம் கைக்கூலிகளாகத் தயாரித்தனுப்புகின்றனர். அப்படி இருக்க ஏன் தாயக உணர்வுடையோர் பிறர் உதவியைப் பெறுதல் கூடாது?

திபேத்தின் நலனிலேயே சீனருக்கு அக்கறையிருக்குமானால்; அவர்கள் அம்மக்களை அன்பு வழிகளில் திருத்த முனைந்திருக்கலாமே! நாட்டின் லாமாக்களும் மற்றைய நிலக்கிழார்களும் ஆன சிலரிடமே வளம் முடங்கிக் கிடப்பது நமக்கும் உடன்பாடு அன்று. அவற்றை ஏழையரின் நல்வாழ்வுக்காக்கும் முயற்சியில் சீன மேற்கொண்ட வழிகளில்தான் நமக்குக் கருத்து வேறுபாடு. படிப்படியாக அம்மக்கள் மனதில் மாற்றத்தைக் கொணர்ந்து புதுமையைச் செயல்படுத்தியிருக்கலாம். மாருக, அங்கே இப்போது கைது செய்யப்பட்ட புரட்சிக்காரர்களின் எண்ணிக்கைமட்டும் 4000 என்று சீனரே ஒப்புகின்றனர். இந்த 4000 மக்களின் பிற்காலம் என்ன? மரணத்தைத் தழுவுதல் தவிர வேறு எதுவாய் இருக்கமுடியும்? சௌஎன்லாய் இப்போது திபேத்தைச் சீனர்கள் கைப்பற்றிவிட்டதாகவும், அங்கே சீனப் படைஞரின் ஆதிக்கம் இருப்பதாகவும் வெளிப்படையாக ஒப்புகிறார். தலைலாமாவின் குளிர்கால மாளிகையான நார்புலிங்கா சீனர்களின் குண்டு மழையால் சுக்கு நூருகிவிட்டது. பல லாமாக்களும் இறந்துபட்டனர்.

இப்படி நிலைமை முற்றுகையில் தான் தலைலாமா தலைமறைவாகி விட்டார். ஒருபுறம் சல்லடைபோட்டுச் சலித்து அவரைத் தேடுகையிலேயே மறுபுறம் தம் கைப்பாவையான **பஞ்சன்லாமாவை** ஆட்சிபீடத்திலேற்றிவிட்டனர், சீனர்.

"எங்கே சென்றார்?" என்று தேடப்பட்ட தலைலாமா இந்தியா வந்து சேர்ந்துவிட்டார். இந்திய அரசினரின் உதவி கோரும் அகதியாக வந்துள்ள அவரும் அவரது கூட்டாளிகளும் அஸ்ஸாமிலுள்ள போம்தில்லா என்ற இடத்தில் இப்போது தங்கியுள்ளனர்.

உலகம் திபேத்தியச் சிக்கலைக் கூர்ந்து கவனிக்கிறது. அந்தச் சிறிய நாட்டில் ஒரு புது முயற்சி நடக்கிறது, சர்வாதிகாரம்பற்றி. மத இருளைப் பரப்பி ஆண்ட தலைலாமாவும் தவறு செய்தார். புதிய உலகைச் சமைப்போம் என்று புறப்பட்டுள்ள பொதுவுடைமை வாதிகளும் புது அடிமை வாழ்வை உருவாக்க முனைகின்றனர். காலமும் அதனுல் உருவாக்கப்படும் மக்கள் கருத்தும் தரப்போகும் பாடங்கள் எவையோ? அவை எவையாக இருந்தாலும், மதவாதிகளால் ஒருகாலம் அழுத்தப்பட்டுவிட்டு, இப்போது சீனச் சர்வாதிகாரிகளால் அழுத்தப்படும் அந்தத் திபேத்தின் எளியோர்க்கு என்றும் நம் ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக!

"புதிய அங்கேரியை உருவாக்கிவிட்ட சீனரே! புண்மையை வளர்ப்பதுதான் உங்கள் புதுமையின் திருவிளையாடல் என்ருல், அது இந்த உலகிற்கே வேண்டாம்! வேண்டவே வேண்டாம்!" என்பதுதான் எம் எண்ணம்!

— மா. பாண்டியன்

? வினா – விடை

கூடலரசன் பதிலளிக்கிறார்

வனமதி, திண்டிவனம்.

அல்ஜீரியப் பிரச்னையை விடுதலைக் கிளர்ச்சி என்பவர்கள் (ஜனசக்தி) அங்கேரிப் பிரச்னையை ஏகாதிபத்தியவாதிகளின் தூண்டுதல் என்று சொல்வது ஏன்?

அல்ஜீரிய மக்கள் குரலை மதிக்காத டிகாலே கம்யூனிஸ்ட்களையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் மதிக்கவில்லை. • எனவே விடுதலைக் கிளர்ச்சி எனப் பாராட்டுகிறார்கள்! இந்தியக் கம்யூனிஸ்ட்களின் தந்தையர் நாடான ரஷ்ய ஆதிக்க எண்ணத்தை அங்கேரிய மக்கள் எதிர்த்தார்கள். உடனே ஜனசக்திப் பத்திரிகைக்கு உள்ளமும் உடலும் எரிச்சல் கண்டது!

★

கம்யூனிஸ்ட் பத்மாவதி,
சென்னை-21.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கொள்கை விளக்கப் புத்தகம் உண்டா? இல்லையென்றால் எப்படி ஒரு அரசியல் கட்சியாகும்? கழகம் ஏன் புத்தகம் தீட்டவில்லை?

கழகத்தின் கொள்கை விளக்கப் புத்தகம் இருக்கிறதா இல்லையா என்ற விவரமே தெரியாத தாங்கள், தெரிந்துகொள்ள முயற்சிக்காத நீங்கள், கழகம் ஒரு அரசியல் கட்சியா என்று கேட்பதே தவறாகும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்பையும் இலட்சிய விளக்கக் கொள்கை கோட்பாடுகளையும் தலைமைநிலைய வெளியீடுகளில் காணலாம்! கழகத்தின் சட்டதிட்டங்களை நீங்கள் ஜனசக்தி ஆசிரியர்களிடமிருந்து தெரிந்துகொள்ள முயன்றால் இல்லையென்றுதான் சொல்வார்கள்! கம்யூனிஸ்ட் கட்சிப் புத்தகங்களைத் தெருவோரத்து வியாபாரிகளின் மூர் மார்க்கெட் குப்பைகளைப் புரட்டினால் கூட எடுத்து விடலாம். கழக ஏடுகளை நீங்கள் காசு கொடுத்து வாங்கிப் படிக்க வேண்டும். சில பெரிய மனிதர்களைப்போலப் பேட்டி காண வருபவர்கள் புத்தகம் கேட்டால் அண்ணா அவர்கள் இல்லையென்றுதான் சொல்வார், போய்த் தேடி அலைந்து வாங்கிப் படிக்கட்டும் என்று! கம்யூனிஸ்ட் கட்சியிலேயிருப்பவர்கள் கழகப்புத்தகங்களைப் படிக்கிறார்கள் என்பதற்கு அறிகுறிகளையே காண முடியவில்லை. அடுக்குமொழிகள் மயக்கிவிடும் என்ற அச்சமிருந்தால் அனுதாபப்படுகிறேன். "A plea for understanding"– என்ற ஆங்கிலப் புத்தகம்கூட இருக்கிறது. நவசினச்செய்திகளையே நம்பியிருக்கும் காம்ரேட்களுக்கு இவையெல்லாம் தெரியாத காரணத்தினாலே உங்களைப் போன்றோரிடம் தெரிவிக்கவில்லை! ஆனால் நீங்களாவது கொஞ்சம் சொந்த முயற்சிக்குப்பின் கேள்விகளைக் கேட்பது உங்கள் திறமையைக் காட்டும். எங்கள் தகுதியும் புரியும்!

★

இரா. தமிழ்ப்பித்தன்,
குடியேற்றம்,

"திராவிட முன்னேற்றக் கழகத்தவரே எங்களுடைய முதல் எதிரிகள் – அவர்களை அழித்தொழிப்பதே எங்கள் முதல் வேலை" என்று குடியேற்றம் பொதுக்கூட்டத்தில் ப. ஜீவானந்தம் குறிப்பிட்டது ஏன்?

இலக்கிய மேதையவர்கள் இதனை இப்போதுதானா சொல்கிறார்? கடந்த பத்தாண்டுகளாக பேசுகிறார் உடல் வலிக்க; குரல் வலிக்க! அவர் கழகத்தைப் பற்றி பேசாத இடம் உண்டா? கம்பன் விழாவிலேகூட கண்டிக்கிறார். 'சங்கரதாஸ் சுவாமிகள்' தினத்திலே பேசினால், அங்கேயும் கழக நெறிமுறைகளைக் காய்கிறார்! ஒழிப்பதே முதல் வேலையென்றால் கம்யூனிஸ்ட் தலைவர் காலத்தை வீணாக்குகிறார் என்பதாகும். ஜீவானந்தம் பஜனையைச் சாதாரணக் கம்யூனிஸ்ட்கள் கூட நம்பமாட்டார்கள்! பரதாழ்வார் வேடம் போட்டு நம்மை சபிக்கப் போகிறாரா? பாபம் தூக்கத்திலாவது நம்மை மறக்கிறாரா என்பது தான் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டிய செய்தி! கழகத்தவரை எதிரிகள் என்று பேசுபவர்தான் நம்முடைய முதல் மாநில மாநாட்டில் பொதுச் செயலாளர் காலடியில் கிடந்தார் என்பதையும் மறந்திருக்கமாட்டார் என்று கருதுகிறேன். அறிஞர் அண்ணா பொன்மலை ரயில்வே மாநாட்டில் கலந்துகொள்ளவேண்டும் என்ற ஆசையினால் அறிவகத்து வாயிலில் காத்துநின்ற கல்யாணசுந்தரம், ஜீவானந்தம், சிண்டன் போன்றவர்கள், அண்ணாவின் பேட்டியை மறந்துவிட்டார்கள் போலும். அதனால் தான் எதிரிகள் என்கிறார். இப்படி சோரம் போன செய்திகள் எத்தனையோ உண்டு!

★

தே. எ. அழகன், தேவலாலி,
நாசிக்.

ரஷ்ய உதவியை நாடுவேன் என்று இங்கு சங்கரன் நம்பூதிரிபாத் கூறியதுபோல், 'நான் அமெரிக்காவின் உதவியை நாடுவேன்' என்று ரஷ்யாவின் ஒரு தலைவர் அங்கு கூறியிருந்தால் அவர் கதி என்னவாகும்?'

சிந்தனைச் சுதந்திரம் சிதறடிக்கப்பட்டுச் சிறைக் கூடத்திலே தள்ளப்பட்டிருப்பார். மேலும் குருஷ்சேவை முறைத்துப் பார்த்துப் பேசினால் சுட்டுப் பொசுக்கி சாம்பலை அமெரிக்க நாட்டு மிஸிஸிபி நதியில் கரைத்திருப்பார்கள்-பரிதாபத்துக்குரிய பாஸ்டர்நாக் போன்றோரின் பழிவாங்கப்பட்ட கதைகள் நமக்குச் சொல்லும் பாடங்கள் இவைதான்!

★

கே எம். எஸ், மைதீன்,
பம்பாய்-17.

ஜனசக்திப் பத்திரிகை கம்யூனிஸ்ட் கட்சியின் சொந்தப் பத்திரிகையா அல்லது வெளியிடுபவர் ஆன கிருட்டிணசாமி என்பவருக்குச் சொந்தமா?

கிருட்டிணசாமி என்பவர்தான் வெளியிடுகிறார். கம்யூனிஸ்ட் கட்சிக்காக வெளியிடுகிறாரா என்பதை இன்னும் தெரிவிக்கவில்லை! 'ஜனசக்தி' நிதியாக இரண்டு லட்சம் வசூலித்து 'இயக்கம்' நடத்திய போதெல்லாம் கட்சிப் பத்திரிகையென்றுதான் கம்யூனிஸ்ட் தலைவர்கள் சொன்னார்கள். 1954 முதல் கொண்டே 'ஜனசக்தி' நிதியைத் திரட்டினார்கள். கும்பலில் ஆடு, மாடு, கோழி, நெல் மூட்டை, கைக்கெடியாரம், மேல்துண்டு இப்படி எத்தனையோ உருவங்களில் நிதி சேர்க்கப்பட்டது. ஆனால்கிருட்டிணசாமி உரிமையாளர் என்கிறார்கள். இதே வினாவை ஜனசக்திக்காரர்களிடமே கேட்போம். அவர்களின் பதிலுரையை எதிர்பார்ப்போம்!

★

கே. ஆர். கந்தசாமி,
கொத்தமங்கலம்.

டாங்கேபற்றிய தென்றல் கட்டுரைக்குத் தமிழ்நாட்டு கம்யூனிஸ்ட் தலைமைப் பீடத்தவர் விளக்கம் கொடுத்துவிட்டார்களா?

நான்காவது கட்டுரைக்குப் பதில் கூறக் குறைந்தது மூன்று மாத காலமாவது எடுத்துக்கொள்வார்கள்! திடீரென்று ஒரு நாள் தென்றல் ஆசிரியருக்குப் பொருளாதாரம் தெரியாது, தொழிற் சங்கம் தெரியாது என்று குதிப்பார்கள். அப்பாவிக் கம்யூனிஸ்ட்கள் தடதடவென்று கைதட்டி வரவேற்பார்கள்! கோவை-பல்லடம் வட்டம் கம்யூனிஸ்ட் தோழர் கந்தசாமி என்பவரும் செவந்தாம்பாளையம் க. நாச்சிமுத்து என்பவரும் கம்யூனிஸ்ட் கல்யாணசுந்தரம் எம். எல். ஏ. அவர்களுக்கு, சட்ட சபையின் மாஜி எதிர்க்கட்சி உபதலைவருக்கு தனித்தனி பதிவுத் தபால் எழுதி, டாங்கேரூ 5000 பெறும் செய்தியை விளக்கும்படி கேட்டார்களாம்–டாங்கேயின் அடுத்த வாரிசு கல்யாணசுந்தரம் இன்னும் மறுமொழி தரவில்லையாம்! கம்யூனிஸ்ட்கள் பதுங்கிக்கொள்ள நல்ல இடம் தேடிவிட்டார்கள். இனி நாம் பதிலை எதிர்பார்க்கக்கூடாது!

தமிழ் புத்தாண்டன்று
வருகிறது!
'திராவிட நாடு' இதழில் வெளிவந்த
சுவைமிக்க புனைகதை
தணலில் தங்கம்
சுழல்விழி மாது கிளப்பிய சூறாவளியில்
கயல்விழிப்பாவை சிக்கி, இடர்ப்பட்டுத்
தணலில் தங்கமான கதை!
மா. கி. தசரதன், எம். ஏ., அளித்திடும்
எழிலோவியம்!
விவரங்களுக்கு
வெண்ணிலா வெளியீடு
சி. காஞ்சீபுரம்

விருத்தப் போட்டி

நித்திரை போகும் யாம
நேரத்தில் 'அண்ணா வென்ற'
தித்திக் கும்சேதி நண்பர்
செப்பிட இன்பம் கொண்டேன்
அத்தகு இன்பம் வேறு
அடைந்தனன் என்றால் அஃது
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்.
சிவ. சுப்பு, சிவகிரி.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்;
துத்திதத் தோது தொத்தி
சுந்தரி அடுத்து வந்தாள்;
தெத்திதத் தேது தெத்தி
'செத்தவர்' தடுத்து நின்றார்;
தத்திதத் தீது தித்தி
தந்திரம் எடுத்து வென்றேன்!
—பொ. மார்க்கண்டன், சோமசுந்தரம்சேரி.

★

சுத்தியின் சின்னம் பெற்ற
செங்கொடி கரத்தில் ஏந்தி
கத்திடும் கயவர் கூட்டம்
காட்டியே கொடுத்தல் வேண்டும்
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
நத்தியே இருத்தல் நன்றோ!
நண்பனே! நினைத்தல் வேண்டும்!
—ஓ. வி. சிவலிங்கம், பொன்னேரி.

★

சொத்திலார் சொத்தை யென்ற
சூளுரை சித்தம் வாட்ட;
முத்தமிழ் ஆழி தாண்டி
மொய்குழல் பிரிந்து செல்ல
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
வித்தக மன்றோ? அந்த
விம்முதல் இளைஞர்க் கேனோ?
—அ. வே. காசிநாதன், அமிர்தராயன் கோட்டை.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
புத்திதத் தாது தத்திப்
போதையைக் கொடுத்த போது
கத்திகுத் தாகக் குத்திக்
கண்ணிடை எழுந்த காதற்(கு)
இத்தரை வானம் யாவும்
ஈடாமோ? இல்லை! இல்லை!
—பே. சா. தனராசு, நாமக்கல்.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்,
முத்திய போர்மு கத்துக்
கொடியவேல் புண்ணைக் கூட
கைத்தலம் பற்றி முத்தம்
கனிந்திடத் தந்த தைப்போல்
மெத்தவும் இனிக்கு தென்றால்
மிடுக்குடன் போர்க்குச் செல்வம்!
—சரசுமணாளன், தேவகோட்டை.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
இத்தரை மீது புத்தி
வித்தகர் விளைத்த இன்பம்
தத்தையர் மீது தத்தி
ஒத்தவர் உணர்ந்த இன்பம்
மொத்தமாய்க் கூட்டி னாலும்
முத்தமிழ்க்(கு) இணையா யாமோ?
—சொ. இராமச்சந்திரன், பள்ளத்தூர்.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
முத்தமிழ்த் தேனால் [illegible]ந்த
முழுவெழில் வண்[illegible] ஊற்றை
நித்தமும் புகழ்வ தெ[illegible]ல்
நேரமே போதா தம்மா!
அத்தி[illegible] மிக்க பாவை
அவனியில உண்டோ வேறே?
—வீர. முருகேசன், பசுமலை.

★

தித்தத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
புத்தமிழ் தொக்கும் என்றேன்;
பூவைதன் கணைக்கண் பாய்ச்சி,
முத்தொளிர் முறுவல் பூத்தாள்;
முத்தமிழ்ச் சுவைகூட் டென்றேன்;
கத்திடும் குயிலாய்ப் பாடிக்
களிமயில் நடனம் செய்தாள்!
—ச. சீத்தாராம் (சீரான்), கோம்பை.

★

இத்தரை மீது என்னை
ஈன்றவள் சொரிந்த அன்பும்
பத்தரை மாற்று எந்தை
பதித்தநல் இனிய பண்பும்
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
இத்தனை இன்ப மெல்லாம்
எந்தமிழ் இன்ப மாமோ?
—இரத்தினசனார்த்தனன், கவுண்டர் பாளையம்.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
எத்துணைப் பெரிது தோழி!
இயம்பிட வார்த்தை உண்டோ
கொத்தினில் இருந்த என்னைக்
கூசிடா தணைத்து வந்து
பித்தெனைப் பிடிக்கச் செய்தான்
பேரெழில் தும்பிக் கள்ளன்!
—அன்பு. செல்லையா, சென்னை-10.

★

சத்திரச் சோற்றுக் கும்பல்
சாத்திரப் புரட்டி லூறி
நித்தமும் நின்று கத்தும்
தத்துவம் கசக்கு மானால்
உத்தமத் தொண்டன் பேச்சில்
ஊறிடும் சுவையைப் போலே
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்.
-க.பொ.இளம்வழுதி, கலிதீர்த்தாள்குப்பம்.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
இத்துணை என்று சொல்ல
இன்றமிழ்ச் சொற்கள் போதா;
சித்திரம் தந்த இன்பே
சீருடைத் தென்று சொன்னால்
'சித்திரப் பாவை' நேரில்
திகழ்ந்திடின் என்ன ஆமோ!
— தாம்பரக்கிழான், தாம்பரம்.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
முத்தமிழ் தொக்கும் என்றேன்;
முழுமதி ஒளிமு கத்தாள்
முத்தொளி பற்கள் தோன்ற
மோகன முறுவல் பூத்து
புத்தமு தின்ப ஆற்றைப்
புலத்தினில் பாயச் செய்தாள்.
—ஏ. பி. காந்திதாசன், வல்லவராயன்பட்டி

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
தித்திக்கும் தேனைப் போன்று
தெவிட்டாத சுவையை யூட்டும்!
நித்தமும் புத்தின் பத்தை
நினைவினில் சேர்க்கும், வாழ்வின்
சொத்தெலாம் அதுவே! இன்பச்
சுடர்மதி! மழலைச் செல்வம்!!
—ஓடை இரா. வடிவேலன், பேரோடு.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
தத்தையை யொத்த மாது
தந்தநல் முத்த இன்பம்
இத்தமும் குளிரச் செய்து
குளிர்ந்தினி தூட்டி னாலும்,
முத்திரை உயர்ந்த சொத்தாம்
முத்தமிழ்க் கீடா மோதான்?
—மு. சுந்தரம் பி. ஏ., கீழக்கல்லூர்.

★

தத்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
மெத்தவும் நன்றே என்பேன்
மேவிடும் இன்ப ஊற்று!
புத்தொளிர் தமிழின் சாயல்
பூத்திடும் இளமைப் பெண்ணாள்
இத்தரை தன்னில் என்றன்
இருவிழிக் கினிய காட்சி?
—மோகனதாசன், மதுரை.

★

கொத்தலர் காவில் நல்ல
குமரியோ வந்தாள் அந்த
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்,
முத்தியே, என்போர் காணார்;
மோட்சமே என்போர் காணார்;
எத்தனை மொழிந்திட் டாலும்
இதற்கிணை உவமை இல்லை!
—புத்தூரான், க. புதுப்பட்டி.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
இத்திறம் என்று சொல்ல
என்னுடை நாவு போதா
கைக்கனம் கண்ட அன்றே
காமமும் காத லாச்சு!
இத்தகு இன்ப மெல்லாம்
எழுத்தினால் வடிக்க லாமோ?
—க. தாயுமானவன், ஆயக்காரன்புலம்-2.

★

புத்தகம் காட்டும் பொன்னும்
புலவர்கள் தேக்கும் தேனும்
வித்தகர் உரையின் பாகும்
வீரமும் அறிவும், ஊட்டும்.
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
செத்ததைப் பிழைக்கச் செய்யும்;
சிறுமையைத் தேய்த்துக் கொல்லும்.
—ப. கணபதி, சோழபுரம்.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
எத்தனை யோஇங் குண்டு
என்றியம் பிடினும்; நண்பா!
பத்தரை மாற்றுத் தங்கம்
பங்கய முகத்து நங்கை
முத்தமிட் டென்னைக் கட்டி
முயங்கிய சுகத்திற் கீடோ!
—புதுவை ச. அருணன், முத்தியால் பேட்டை.

★

பத்தினிப் பாவை தொட்டுப்
பஞ்சணை கொடுத்த இன்பம்,
முத்தியைத் தேடி, பக்தி
மூடர்கள் காணும் இன்பம்,
எத்தனை கோடி இன்பம்
இந்நிலம் இருக்க; வெல்லும்
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்.
—வ. கோவிந்தராசன், ஈக்காட்டுத்தாங்கல்.

★

தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்,
தத்தியே கத்தும் வண்ணத்
தத்தைபோல் மொழியாள் வந்தே
சித்திரப் பாவை தாரா
தீஞ்சுவை முத்தம் தந்தாள்
இத்தனை எல்லாம் வீணே
முத்தமிழ் வெல்லும் தானே!
—அர. இராசாராமன், வளவனூர்.

★

பத்தியை மறவோ மென்பர்!
பற்றவப் பெரியோர் என்பர்!
முத்தியே பெறுவோ மென்பர்!
முனிவரர் நாமே என்பர்!
தித்திதத் தாது தத்தி
சித்திரம் கொடுத்த இன்பம்
தத்தையைக் கண்டா லந்தோ
தையலைத் தொடர்ந்தே செல்வார்!
—சி. காரையா, தஞ்சை.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.